ரிஜிஸ்டர் நெ. 3157 மலர் 2

# சிவ பக்தன்.

மாத வெளியீடு

## பவ-வருஷம் புரட்டாசித் திங்கள்

விநாயகர் காப்பு,

அரிய சஞ்சித மகலவும் புரியுடம் பிட மொழியவும்
விரியுகம் பவ மெரியவுங் கரிமுகன் கழல் கருதுவாம்.




பத்திராதிபர்:

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.

# வேண்டுகோள்

ஆஸ்திக சிகாமணிகளான சிவபக்தர்களாயுள்ள பிரதியொருவரும் இப்பத்திரிகையை ஆதரிக்க வேண்டியது முதற் கடமையும், முக்கிய கடமையுமாகும், ஆகையாலிதைக் கண்ணுறும் அன்பர்களொவ்வொருவரும் ரூ. 1—8—0 மணியார்டர் செய்து சந்தாதாரராகச் சேரவேணுமாய் அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

நம்ம பொருளானது பலவழிகளிலும் சிலவழிந்து விடுவது சஹஜமாயிருக்கிறது, ஆகையாலிப்படிப்பட்ட அறிவிற்குணவாகிய இப்பத்திரிகைக்கு செலவிடுதல் சாலச்சிறந்ததென அறிஞர்கள் கூறுவர். இதிலுள்ள விஷயங்கள் ஆழ்ந்த கருத்துடையவைகளாகையால் ஒருமுறை வாசித்து விட்டுவிடாமல் சாவகாசமுள்ளபோது பலதடவைகளிலும் வாசிக்கில் விஷயங்கள் மனதுக்கு நன்கு புலப்படும்.

## சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| வருடமொன்றுக்கு தபாற் கூலியுள்பட | இந்தியா பர்மா சிலோன் முதலான உள்நாட்டிற்கு | ரூ. 1—8—0 |
| | பினங்கு சிங்கப்பூர், தென்னப்பிரிக்கா முதலான வெளி நாடுகட்கு | ரூ. 2—8—0 |
| | தனிப் பிரதி ... | 0—2—0 |
| | மலாய் நாடுகட்கு 15-காசு அல்லது | 0—3—0 |

ஒரு வருடத்திற்கு குறைந்த சந்தா கிடையாது எப்போது சேர்ந்தாலும் அவ்வருட ஆவணி மாதமுதல் கணக்கு வைத்து ஆவணி மாதசஞ்சிகை முதல் பத்திரிகை அனுப்பப்படும்.

## விளம்பர விகிதம்.

| | |
|---|---|
| உள்பக்கம் ஒன்றிற்கு 1-மாதத்திற்கு | ரூ. 5—0—0 |
| அரைப்பக்கத்திற்கு | ரூ. 3—0—0 |
| கால் பக்கத்திற்கு | ரூ. 1-12—0 |

நீடித்த விளம்பரத்திற்கு எழுதிதெரிந்துக்கொள்ளலாம்,

பத்திராதிபர்

**வை. செ. குருசாமி ஐயர்,**

குகை, சேலம்.



உ

ஸ்ரீ ஜகத் குரு பஞ்சாசார்யேப்யோ நம:

# நேயர்களுக்கோர் விஞ்ஞாபனம்.

**சத்** பக்த சிரோன்மணிகளான சிவநேயச் செல்வர்களே! பரந்த பாரததேசத்தின் ஒரு பாகமாயுள்ள நம் தென்னிந்தியாவில் சொற்பஜன சங்கையுள்ள ஒவ்வொருசமூஹத் தவருங்கூட தங்கள் தங்கள் சமூஹ முன்னேற்றத்தின் பொருட்டு ஒவ்வொரு பத்திரிகையை சில காலங்களாகப் பிரசுரம் செய்து வந்து மேம்பாடடைந்து வந்திருக்கும் விஷயமானது, சர்வருக்கும், கரதலாமலகம், (உள்ளங்கை நெல்லிக்கனி) போலத் தெரிந்ததாயிருக்கிறது.

வடநாட்டிலுள்ள நம்ம லிங்காயுதர்கள் தங்கள் சமூஹ முன்னேற்றத்திற்காக அந்தந்த தேசபாஷைகளில் மைசூர், உப்பள்ளி, தார்வடா, ஹாவேரி, பிஜாப்பூர், முதலான நகரங்களில் பிரசுரிக்கப்படும் வார வெளியீடுகள், ஏழும், மற்றும் யாதகிரியில் பிரசுரமாகும், மாதவெளியீடும். பிஜாப்பூரில் பிரசுரமாகும், திரிமாசிக (மூன்று மாதத்திற்கொரு) வெளியீடும், நமக்குத் தெரிந்தவைகளாயிருக்கின்றன. ஆக இப்பத்திரிகைகளை நீண்ட காலமாகப் பிரசுரம்செய்து சமூஹ அபிவிர்த்தி யடைந்திருப்பதானது. போற்றத் தக்கதாயிருக்கிறது. வடநாட்டில் நமக்குத்தெரிந்தவரையில் இத்தனை லிங்காயத பத்திரிகைகளுலாவிக் கொண்டிருக்கவும்.

நமது தென்னாட்டிலோவெனின் லிங்காயுதர்கள் பலவிடங்களில் பெரும் பான்மையான, ஜன சமூஹமாயிருந்துங்கூட லிங்காயுத மதத்தின் தத்துவங்களையும், லிங்க பூஜையின் விதிமுறைகளையும், மற்றும் நம்முடைய லௌகிக, வைதிக, கருமங்களையும், இதர மதங்கட்கும் இம்மதத்திற்கு முள்ள பேதா பேதங்களையும், தெளிவாக எடுத்துரைக்க ஒருபத்திரிகையு மில்லாமலிருந்தது

நம் சமூஹத்திற்கே பெரும் குறையாகவும், அறிவிற்சிறந்தவனேக அன்பர்களின் மனச்சஞ்சலமாயும் சில காலங்களாக இருந்துவந்தது அநேகர்களுக்குத் தெரிந்த விஷயமாயிருக்கிறது. மற்றும்

பரசிவனுடைய இரண்டாவது சொரூபனான சதாசிவனுடைய சிருஷ்டியிலிந்த லிங்கதாரிக ளுற்பவமானதா லிவர்கள் ஊர்த்துவ சிருஷ்டிஜ ரென்றும், அதிவர்ணாஸ்ர மிகளெனவும், நித்திய முக்தரெனவும் சிவாத் வைதரெனவும் பதிகளெனவும் சொல்லப்படுவார்கள் மற்றும்

உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும், இந்த லிங்காயதர் மதமே குருமதமென்றும், மற்றெல்லாரையும்விட லிங்கதாரிகளே பரம பவித்திரரென்றும், இவ்விலிங்கதாரிகளுக்குள் ஜங்கமர்களே சிரேஷ்டரென்றும், இவர்களே மறுபிறவியில்லாத கடைசி ஜென்மத்தவர்களென்றும், மற்றும் ஜங்கமதரிசனமே லிங்க தரிசனமெனவும், ஜங்கமனுடைய பாத தீர்த்தமே அநேக பாவங்களைப் போக்க வல்லதெனவும், ஜங்கமதேவனுடைய பிரசாதமே சகல பாவத்தையும், போக்கி புண்ணியத்தைக் கொடுப்பதெனவும், சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதைப்போல நாமுமிதை வாக்கில் மாத்திரம் சொல்லிக்கொண்டு செய்கையிலில்லாமல் அநுஷ்டான சூன்யராயிருந்தால் "ஏட்டுச்சுரைக்காய்கறிக்குதவா"தென்னும், பழமொழியைப்போல, கேலிக்கிடமாகுமல்லவா. பின்னும் நம்மை உலகத்தவர்கள் மருளர், பித்தரென நினைக்கவும், கூடுமல்லவா. மேலும்,

நாம் நாள்தோறும் அனுஷ்டித்து வரும் பூஜா விதிகளும் மற்றைய புண்ணியாவசன முதலான சுபாசுப எல்லாக்கருமங்களும் சிவகைங்கர்யமாகவே யிருக்கின்றன. கேவலம் லௌகீகமன்று, பின்னையோ, வைதீகமாம், இவ்வைதீக கருமங்களினின்றும் நம்தென்னாட்டிலுள்ள நம் மதஸ்தர்கள் நாளடைவில் நழுவி வருவதைக்கண்ணுற்றும், மற்றும் பிற மதஸ்தர்க ளனேக அபிவிர்த்தியடைந்திருப்பதைக்கண்கூடாகப் பார்த்தும், கேட்டும்கூட, நம்மவர்கள் விழிப்படையாமலிருப்பதால் அயலார்கள் நம்மைப்பார்த்து எள்ளி நகையாடா வண்ணம் நாமனைவரும் இக்ஷணமே ஜாக்ருதர்களாகி நமக்குள் சிலகாலங்களாக வேரூன்றியிருந்து வந்த வகுப்புப்பிளவுகளை நீக்கி லிங்கதாரிகளனைவரும் ஒரே சமூஹத்தவர்களென்றுணர்ந்து ஒருமனப்பட்டனைவரும் வைதீக தற்பரராகிப் பரமேஸ்வரனுடைய திருவருளைப்பெற்றுய்யும் பொருட்டு

சிவபக்தன் உதித்தானே யல்லாமல் சுயநலத்தையும், லாபத்தை யும், கௌரவத்தையும் கருதி யல்லவென்றும், மற்றும் சமூஹத் தொண்டே சிவத்தொண்டெனவும், சமூஹசேவையே சிறந்த சேவையென்னும் ஆன்ருேர்கள் வாக்கின்படி நீங்களனைவரும் சிவபக்தன் பத்திரிகைக்கு சந்தாதாரராகச் சேர்ந்து தங்கள் சந்தாத் துகையை மணியார்டர் செய்தனுப்பியது, அல்லது அனுப்புவதுடன் சரி, நாம் செய்யவேண்டிய காரியம் முடிந்துவிட்டதென்றிராமல் பிரதியொருவரும் தங்கள் தங்களாலியன்றவளவு குறைந்தபக்ஷம் இரண்டு மூன்று சந்தாதாரர்களையாவது சேர்த்து தொகையை அனுப்பவேண்டியது, மற்றும் தங்கள், தங்கள் கிராமங்களில் ஒருநாளொருகூட்டம் சேர்த்து, அக்கூட்டத்திலிப்பத்திரிகையின் விஷயத்தையும் இதனாலடையும், அபிவிருத்தியையும் அனைவருக்கும் விளங்கும்படியாகத் தெளிவாயெடுத்துச் சொல்லி ஒவ்வொரு பக்தர்களையும் சந்தாதாரராகச் சேர்த்து, சந்தாத் தொகையை வசூலித்து அனுப்பவேண்டியது. நம்சமூஹ அபிவிர்த்திக்காக அன்பர்கள் செய்யவேண்டிய கடமைகளில் முதற் கடமையும் முக்கிய கடமையுமாகும்

ஆகையால் ஒவ்வொரு பக்தசிகாமணிகளான சகோதர சகோதரிகளனைவரும், இப்பத்திரிகையின் அபிவிர்த்திக்காகத் தங்கள் தங்களான முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமெனவும், பிரதி மாதம் வெளியிடுகளையும், ஒருதடவை வாசித்ததே சரியென்றிராமல் சாவகாசமுள்ள போதெல்லாம் பல தடவைகளில் படிக்கவும், விஷயங்கள் நன்கு மனதில் பதியும். மற்றும் முக்கியமான சுலோஹங்களையும், மனனம் செய்துக்கொண்டு இஹபர சாதனங்களை திருத்தமாக நடத்தி கிருதார்த்தர்களாக வேண்டுமெனக் கோருகிறேன். மற்றும்,

அன்புமிக்க அன்பர்களொவ்வொருவரும் ஒவ்வொரு விஷயங்களை வெளியிடும்படி கடிதங்கள் மூலமாகவும் நேரிலும் தெரிவித்துக்கொண்டிருப்பதாலும் குருக்களிலொருவர் காயத்ரி முதலான அதிவிசேஷ ரஹஸ்ய மந்திரங்களைப் பூராவும் வெட்ட வெளியாகப் பிரசுரிக்கலாகாதெனவும் அந்தந்த மந்திரத்தின் தலைப் பெயர் மாத்திரம் சொன்னல் போதுமெனவும் இப்படிப் பலவித கருத்துடையவர்களாயிருப்பதால் இனி இப்பத்திரிகையில் தொடர்ச்சியாக வெளிவருபவைகளானது இதுகாறும் நம்திராவிட பாஷையில் வெளிவாரத விஷயங்களாகவே யிருக்கும், அவையாவன, ஈஸ்வரபக்தி, குருபக்தி, விஹிதக்கர்மங்களின் அனுஷ்டானக்

கிரமம் லிங்கிப்பிராஹ்மண லக்ஷணம் ஸ்ரீமூலபஞ்சாசார்யர்களால் ஸ்தாபித்துள்ள மடாலய விபரங்கள், அம்மடாலயங்களின் புராதன சரித்திரச் சுருக்கம், அம்மடாதிபதிகளெழுந் தருளியுள்ள மஹா சன்னிதானங்களின் சரித்திரச் சுருக்கம், அம்மடாதிகளைச் சேர்ந்த கிளைமடங்களின் விபரங்கள், அம்மடாதிகளிலுள்ளவனேக ராஜாதி ராஜர்களால் கொடுக்கப்பட்ட தான சாசனங்களின் விபரங்களும் மற்றும் திரிபுரசம்ஹார காலத்திலுதித்த சிம்ஹாசனாதிபதிகளுடையவும், அல்லமாப்பிரபு தேவர் பூலோகத்தில் திருவவதாரம் செய்த காலத்திலுண்டான சூன்ய சிம்ஹாசனாதீசர் முதலான குருபீடாதிபதிகளின் திவ்ய சரித்திரச் சுருக்கங்களும், மற்றும் கல்யாணி பட்டணத்தின் பிஜ்ஜள ராஜனுடைய பிரதம அமைச்சராயிருந்த பசவேஸ்வரனுடைய செய்கைகளும், சரித்திரச் சுருக்கமும், மற்றும் கும்பகோணம் சாரங்கதேவர் மடாலய விஷயங்களும், தீக்ஷாவிதி, தீக்ஷையின், பலாபலன்கள், ஹோம யக்ஞ பிரகரணம் சிவலிங்க மகிமை, இஷ்டலிங்கத்தின் சிரேஷ்டத்வம், லிங்காயுதர்களின் விதிமுறைகள், திரிவித லிங்கோபாசனை லிங்கதாரணவைபவம், லிங்க பூஜையின் தத்துவங்கள், சிவபூஜா பிரபாவம், சிவயோகம், ஷடங்கயோகம், லிங்கசூத்திர நிர்ணயம், புண்ணியா வசனம், விவாஹவிதி, லிங்காயுத மதத்தத்துவவிசாலத்வம், லிங்காயுத மதத்தத்துவ நிரூபணம், லிங்காயுத தர்மவிசாலத்வம், ஸ்ரீ ரேவண லீலை, மஹாசிவன்ராத்திரி பூஜை, வேதோக்த சிவபூஜாவிதி, விசேஷ பூஜாவிதிகள், ஸ்திரீதேவதாபூஜா மந்திரங்கள், சரஸ்வதி பூஜை, பட்டாபிஷேகவிதி, நூதன கிரஹப்பிரவேசவிதி, வாஸ்து சாந்தி, நவக்கிரஹ சாந்தி, நாமகரணானுஷ்டானவிதி, அந்தியேஷ்டிவிதி, சமாதிகிரியை. முதலானவைகளும் மற்றும், கைலாச பர்வதம், ஸ்ரீசைவ பர்வதம், கேதாரநாதம், பதரீநாதம, காசீக்ஷேத்திரம், ரேவண சித்தகிரி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களின் அபூர்வ விருத்தாந்தச் சுருக்கங்களும், மற்றும், விதேசங்களிலுள்ள சிவாலயங்களின் வியாபகங்களையும் சிவசரணனை, சுவாமி தாசிமையனுடைய திவ்விய வசனங்களும், சரித்திரச் சுருக்கமும், பஞ்சாசார்ய பஜனை கீர்த்தனங்கள் ஸ்தோத்திரங்கள், ஸ்துதிகள், முதலியவைகளும், மற்றும் தேவாதி தேவர்களுக்கு அத்யந்த பிரீதியானதும், உலகோர்களால் புகழ் பெற்றதுமான பவுத்திர மூலிகைகளின் அபார சக்திகளையும், அவற்றால் உலகினரடையும், மஹோபகாரங்களைம், மற்றும் ஹிந்து வைத்திய வைபவம், முதலிய பிரதானமான சமஸ்த விஷயங்களும், தக்க சாஸ்திரச் சான்றுகளுடன் வெளி வந்துகொண்டிருக்கும், இவைகளில் சொல், பொருள். குற்றங்களிருப்பின் உலகம் பொறுக்க.

ஓம். சாந்தி, சாந்தி, சாந்தி:

# பூர்வம் ஆதி உற்பத்தி.

1-வது சுலோஹம்.

வாசா தீதோ மனோ தீதோ—பாவா தீதோ அகோசர:
சர்வ சூன்ய நிராலம்போ—நிஸ்சப்தோ பிரஹ்ம உச்யதே 1.

அஸ்தி நாஸ்தித் வயாநேதோ—வாங்மனோ சோசராத்மக:
அவர்ணோ வர்ண சம்யுக்தோ—விரூபோ விஸ்வரூபபிருத் 2.

பூர்வத்தில் வாக்கிற்கும் மனத்திற்கும், பாவத்திற்கும், மீறினதாகவும், மற்றும் விஷயமல்லாததும், யாதொன்று மில்லாத யாதொரு ஆச்ரயமுமில்லாத நிஸ்சப்தமாய்ப் பரிபூர்ணமான் பரப்பிரம்மம், மற்றும் எப்படிப் பட்டதென்றால்:-உண்டு, இல்லை, என்னுமிரண்டு வாக்கியத்திற்கும், மீறினதும், வர்ண ரஹிதமானதும், சமஸ்த வர்ணங்களுடன் கூடினதும், ரூபரஹிதமானதும், ஜகத் ஸ்வரூபத்தைத் தரித்ததுமாம். இப்படிப்பட்ட பரப்பிரம்மம் தானே தானாகி இருந்தார்.

வேத சுலோஹம்.

எகயேவோ நத்விதியாய தஸ்த்தேன பிரஹ்மான
விஷ்ணுர்ன சூர்யோ நாக்னி சந்திரதாரகா:

என்னும் வேதவாக்கியங்களின் பிரகாரம், அந்த நிராகார பரசிவனே பரப்பிரம்ம மென்று நிராகார, நிரஞ்சன, நிர்குண, நிஸ் சூன்ய, நிர்ப்பேத்திய, நிர்காம, நிஸ்சிவனென்னும் அநேக பர்யாய நாமங்களுள்ள அவரே அநாதி பரசிவன், அந்த அனாதி பரசிவனே ஆத்மன்.

2-வது பஞ்ச பூத உற்பத்தி, வேத சுலோஹம்

ஆத்மசம்பூததாகாசம் ஆகாசத் வாயு:
வாயோரக்னி: அக்னேராப: அத்ப்ய: பிருதிவீ
பிருதிவ்யா: ஔதம ஔஷதா தன்னம்
அன்னாத்ரேதஹ ரேதச: புருஷா:

அந்த ஆத்மாவிலிருந்து ஆகாசம். அந்த ஆகாசத்திலிருந்து வாய்வு, அந்த வாய்வினால் அக்கினி, அந்த அக்னியினால் ஜலம், அந்த ஜலத்தினால் பூமி, அந்த பூமியினால் சகல தானியங்கள், அத்தான்யங்களால் அன்னம், அந்த அன்னத்தினால், ரேதஸ், அந்த ரேதஸால், மனுஷ்யன்பிறந்தானென்றும் மேற்சொன்ன வேத வாக்கியங்களினாலிதற்குக் கிரம சிருஷ்டியென்று சொல்லப்படும்.

## 3-வது, பஞ்ச கர்த்தாக்களுற்பத்தி.

வாதுளாகம சுலோஹம்.

ஆதிதளஷ்யோமஸ்திஸ்திதோ பாதி சாக்ஷாத்தேவஸ் சதாசிவ:
சதாசிவா தீஸ்வரோபூத் சம்பூத: பவனேஸ்தித: (1)

ஈஸ்வராத பூருத்ரோ வன்ஹி தத்வேவ்ய வஸ்தித :
ருத்ராத் விஷ்ணு மஹாதேஜோ வாரிதத் வேவ்வியவஸ்தித :

விஷ்ணுதத்வோதி தோபிரஹ்மா பிருத்விதத் வேவ்யவஸ்தித
ஏவம்பரா சக்திஜாதா: விஸ்வரூபா: பஞ்சமூர்த்தய: (3)

இன்னும் பஞ்ச பூதாதி பதிகளான பஞ்ச கிருத்யா தீஸ்வரர் உற்பத்தி எப்படி என்றால் அந்த அநாதி பரசிவத்திலிருந்து ஆகாச பூதத்தில், பிரதிபிம்பமான சதாசிவன் பிறந்தான். அச்சதாசிவனால், வாயுவில் பிரதி பிம்பமான ஈஸ்வரன், பிறந்தான், அந்த ஈஸ்வரனால் தேய்வில் பிரதி பிம்பமான ருத்திரன் பிறந்தான். அந்த ருத்திரனால், அப்புவில் பிரதி பிம்பமான விஷ்ணு, பிறந்தான். அந்த விஷ்ணுவினால் பிருதிவில் பிரதிபிம்பமான பிரம்மன், பிறந்தானென்று வாதுளாகமம் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னுமிப்படிப்பட்ட சதுர் முகப் பிரம்மனே சிருஷ்டி கர்த்தன். இவர் சிருஷ்டி கிரமம் எப்படி என்றால்

## 4-வது பிரம்ம சிருஷ்டி.

முதல் தன் சத்துவ குணத்துடன் கூடி சமஸ்த தேவதைகளையும், பிறப்பித்தான். பின்பு தன் ராஜோகுணத்துடன் கூடி சமஸ்த பிசாச தேவதைகளையும், நிர்மாணித்தான். மற்றும் தன் தமோ குணத்துடன் கூடி எல்லா ராக்ஷசர்களையும், நிர்மாணித்தான். மற்றும் தான் முக்குணங்களுடனும் கூடி மனுஷ்யர்களை நிர்மாணஞ் செய்யவேண்டி (4) வர்ண, (6) மதம், (18) ஜாதியில் (101) குலத்திய மனிதர்களைப் பிறப்பித்தான். இவர்களெல்லாம் இந்தப் பிரம்ம சிருஷ்டியினால் பிறந்தவரானதினால் இவர்களுக்கெல்லாம் பிரம்மன், சிருட்டியும், விஷ்ணுவின் ரக்ஷணையும், ருத்திரனில் லயமென்று அறியவேண்டியது. இன்னுமிந்த சிருஷ்டிகள் அதோ சிருஷ்டி யென்றும், பிரம்ம சிருஷ்டி யென்றும், இருவிதமாகச் சொல்லுவார்கள்.

## 5-வது லிங்காயுத மத உற்பத்தி.

இன்னும் முன் சொன்ன நிராகார பரசிவத்தின் இரண்டாவது ஸ்வரூபமானவனே சதாசிவன், அச்சதாசிவனுக்குப் பஞ்ச முகங்

கள் தச புஜங்கள் திரிநேத்திரங்களு முண்டு. அவனுக்குச் சாகார மூர்த்தியென்றும், சகுணப்பிரம்மமென்றும், மூலமூர்த்தியென்றும் மஹாதேவனென்றும், வேத வேத்யனென்றும்,சதாசிவ னென்றும் பஞ்சவிம் சதி லீலாமூர்த்தி என்றும், பஞ்சகிருத்யா தீஸ்வரனென்றும், மஹேஸ்வர னென்றும், அனேக பர்யாய நாமங்களுள்ளவனே சதாசிவன். இதற்கு சாக்ஷி.

ஸ்காந்த புராண சுலோஹம்.

க்ருத காடிண்ய வன்மூர்த்தி சச்சிதாநந்த லக்ஷித:
மூல மூர்த்திர் மஹாதேவோ: வேத வேதஸ்சதாசிவ:
ஆதி கர்த்தா ஜகன்நாதா, சூலபாணி ரிதிஸ்ருதி: 1.

ஆதித்ய புராணம் 24-வது அத்யாயம்.

உமெயாசஹிதோதேவஸ் சோமயித்புச்யதேபுதை:
சயேவகாரணம் நான்யோ, விஷ்ணுரபிசவைஸ்ருதி: 2.

இன்னும் சுருதி, சுலோஹம்,

வேதமாதாசகாயத்திரி மந்த்ரமாதா ஷடாக்ஷரி,
சர்வதேவ பிதா சம்பு பர்க்கோ தேவஸ்யதீமஹி 3.

யஜுர் வேதம்.

சோம: பவதெஜனிதாமதீநாம் ஜனிதாதிவ: ஜனிதாப் ருதிவ்யா: ஜனிதாக்னெ: ஜனிதா சூர்யஜ்ய ஜனிதேந்த்ரஸ்ய ஜதாத விஷ்ணு:

இப்படிப்பட்ட சதாசிவனே சகல வேதாகமங்களுக்கும், மந்திரங்களுக்கும், தேவதைகளுக்கும், மற்றும் சகல புவணங்களுக்கும், சுவர்க்க பூமி, அக்கினி, சூரியன், இந்திரன், விஷ்ணு, முதலானவர்களுக் கெல்லாம், இச்சதாசிவனே தந்தை யெனவும், சகல வேதாகம புராணங்களிலும், பிரசித்தமாய் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இப்படிப்பட்ட சதாசிவனே அநேகபிரம்மாண்டங்களெல்லாவற்றிற்கும், கர்த்த னென்பது சித்தாந்தம். இப்படிப்பட்ட சதாசிவனது பஞ்ச முகங்களாவன, 1. சத்யோஜாதம், 2. வாமதேவம், 3. அகோரம், 4 தத்புருஷம், 5. ஈசான்ய மென்னும், பஞ்ச முகங்களுள், இந்த ஈசான்ய முகமே ஊர்த்வ முகமென்றும் இது ஒன்றே மேலாயிருப்பது. மற்ற நான்கு முகங்களும், நான்கு திக்குகளுக்கும், சரியாகயிருப்பது. இவ்வைந்து முகங்களுள் 1-வது சத்தியோஜாத முகத்தில் வீரசைவப் பிராமணர்கள் பிறந்தார்கள். 2-வது வாமதேவ முகத்தில், வீரசைவ க்ஷத்திரியர்கள் பிறந்தார்கள். 3-வது அகோர முகத்தில், வீரசைவவைசியர்கள் பிறந்தார்கள். 4-வது தத்புருஷ முகத்தில் வீரசைவசூத்திரர்கள் பிறந்தார்கள். இப்படிச்சதாசிவன், நான்கு முகங்களிலும், வீரசைவ நான்கு மதஸ்தர்கள் பிறந்தார்கள். இதற்குதாரணம்:-

## சித்தாந்தசிகோபநிஷத்து.

சத்யோஜாதாத் பிரஹ்மணஸ் சம்பபூவு:
வாமதேவாத் க்ஷத்திரியா: அகோராத் வைஸ்யா:
தத்புருஷாத் சூத்ரா: கண: ஈசான்ய தஸ்யு:

இன்னும் ஈதல்லாது அச்சதாசிவனின் ஊர்த்துவ முகமான 5-வது ஈசான்ய முகத்தினால் அதிவர்ணிகளான அத்யாஸ்ரமிகளான கணவம் சத்தவரான சாயுஜ்ய பதஸ்தரான நித்ய முக்தரான லிங்காங்கிகள் பிறந்தார்கள். இதற்குதாரணம்:-

## லிங்கதாரணோபநிஷத்து.

பஞ்சமோ லிங்கதாரக: யத்யாஸ்ரமாத் யாஸ்ரமாணாம்
மத்ய லிங்கதாரி ஸ்ரேஷ்டோ பவதி

இன்னுமிந்த ஜகத்திலுள்ள நான்குவர்ணங்களுக்கும், நான்கு ஆஸ்ரமங்கட்கும் பஞ்சமதஸ்தரான இந்த லிங்கதாரிகளேசிரேஷ்டரென்று லிங்கதாரணோப நிஷத்திலும், இப்படிப்பட்ட லிங்கதாரிகளே மஹாபவித்திர ரென்று ருக்கு, யஜுர், சாம, அதர்வண முதலிய நான்கு வேதங்களிலும், இன்னும் சிவாகமங்களிலும், இப்படியே சொல்லப்பட்டிருக்கின்றன. உதாரணம்.

### ருக்வேத சுலோஹம்.

ருகித்வ: பவித்ரந்தெ விததம் பிரஹ்மணஸ்பதெ
தஸ்மாத் பவித்ரம் தல்லிங்கம் தார்யம் சைவமனுமயம் 1.

இப்படிப்பட்ட லிங்கதாரியே மஹாபவித்திரனென்று ருக்வேதம் சொல்லி இருக்கிறது. இன்னும் இப்படியே

### யஜுர் வேத சுலோஹம்.

அகோரா பாபகாசீதி யாதெருத்ர சிவாதனு:
யஜுக்ஷாகியமெதயஸ்மாத் தஸ்மாச் சைவோகனவர்ஜித: 2.

### சாம வேத சுலோஹம்

பிரஹ்மேதி லிங்கமாக்யாதம் பிரஹ்மண: பதிரீஸ்வர:
பவித்ரம் தத்தி விக்யாதம் தத்சம் பர்க்காத் தநுசி: 3

### அதர்வண வேத சுலோஹம்.

ஆதப்த தநு ரஜ்னோவை ஆமஸ் சமஸ்கார வர்ஜித:
தீக்ஷயா ரஹிதஸ் சாக்ஷாந் நாப்னுயா லிங்கமுத்தமம் 4.

பவித்ரம்தெ விததம், பிரஹ்மணஸ்பதெ பிரபுர்க்கா
த்ராணிபர்யே ஷிநிஸ்வத: அதப்த தநுர்நத
தாமோஸ்நுதெஸ்ரிதா சயித்வஹம் தத்சமாசத:

என்னுமிவ் வேத வாக்கியங்களல்லாமல் இன்னுமிப்படியே.

சிவாகம சுலோஹம்.

பஞ்சாஸ்ய பஞ்ச முகாத்திய தாஜாதோ ததோதிகா:
பஞ்சபாஸ்சர்வவர்ணேப்யோ,மத்பக்தாமத்பிரியாஸ்சத 1.
அதிவர்ணஸ்ர மாசாராஸ் சம்பவம்ந்த் யோர்த்வவக்த்ரத:
தேவைசாக்ஷான்மஹாதேவி, மோதம்தெயாகமேஷு ச 2.
அதிவர்ணஸ்ரமோ ப்ரோக்தோ, குருசர்வாதி காரிணும்
நதஸ்யாபி பவேஸ்ரேஷ்டோ, யதாஹம் புருஷோத்தம: 3.

அதிவர்ணஸ்ரமோ சாக்ஷாத், குருணும் குரு ருச்யதெ
யோதித்பஸ்வாஸ்ரமான்வர்ண, நாத்மன்யேவஸ்தித புமான் 4.

அத்யாஸ்ரமோயம் சர்வேஷு, சதுர்ஷ்ய பியாஸ்ரமேஷு ச
ய: பசுஸ்ச பசுத்வம் சவிநுதெ, நான் யேன சம்த்யஜேத், 5.
சேதிவர்ணஸ்ர மொப்ரோக்தோ, சர்வவேதாந்த வாதிபி:

முதலில் சொல்லப்பட்ட அச்சிருஷ்டி அப்பரப் பிரம்மன் நான்கு முகங்களில் பிறந்த 4. வர்ணங்களும், 4. ஆஸ்ரமங்களும், யெது வெது வென்றால் பிரம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்திரரென்பதே நான்குவர்ணங்கள். பிரம்மசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், யதிகள் என்பதே. 4. ஆஸ்ரமங்கள் இப்படிப்பட்ட நான்குவர்ணஸ்ரமங்களினுல்புத்தரான மனிதர்களே பசுக்களென்று மேற்கண்ட ஆகம கிரந்தங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. இன்னும் அப்பரசிவன் ஊர்த்துவ முகத்தில் பிறந்த அதிவர்ணஸ்ரமிகளான பஞ்சமத லிங்கதாரிகளே பதிகளென்று அநேக சிவாகமங்களில் சொல்லியிருப்பதற்குக் காரணம். இப்படிப்பட்ட லிங்கதாரிகள் மதமே எல்லா மதங்களுக்கும், சிரேஷ்டமான குருமதமென்று சகல வேத வேதாங்கசிவாகம புராணங்களில் பிரசித்தமாயிருக்கிறது. இன்னுமிவர்கள் குலம், கோத்ரம், சாகெ, பிரவரங்கள் எது வெது வென்றால், இவர்கள் சிவனலே பிறந்ததாகணம் இவர்களுக்குச் சிவன் குலமே குலம், நந்தீஸ்வரன் கோத்ரம், வீராகமமேசூத்திரம் ஸ்ரீ ருத்திரன் சாகெயேசாகை நிரஞ்னகணேஸ்வரன் பிரவரம். இதற்குப் பிரமாணம்.

சுலோஹம்.

வீராகமாசார சூஸ்த்ரம், கோத்ரம் நந்தீஸ்வரஸ் மிருத:
குலம் சிவ குலம் புரோத்தம், சதாசார பிரவர்த்திணம் 1.

ஸ்ரீ ருத்ராத்த மந்த்ரம்ச சாகேதி பரிகீர்த்தித:
நிரஞ்ஜன கணேசஸ்ய ப்ரவர: பரிகீர்த்தித: 2.

இன்னும் இம்மதத்திற்கு கர்த்தன் யாரென்றால் ஆதி மூர்த்தியான சாகார பரசிவனான அச்சதாசிவனே கர்த்தன். இன்னும் இம்மதத்தின் உற்பத்தி காலமேது வென்றால் இச்ஜகத்தின் சிருஷ்டியாதிகாலமே இம்மதத்தின் உற்பத்திக்காலம். இதற்குப்பிரமாணம்.

உத்தரமீமாம்சை. சுலோஹம்.

தத்ர சர்க்காத்ய காலெ பரமேஸ்வர: ஸ்ருஜ்யமான
பிரபஞ்ச வைசித்ரஹேது பிராணி கர்மசஹகிருத பரிமித
நிருபித சத்தி விசேஷ விஸிஷ்டமாயா சஹிதவன்
நாம ரூபாத்ம நிகில பிரபஞ்ச புத்பாகல்ய்ய
இதம் கரிஷ்யா மோதி சங்கல்பயதி

இவ்வாறாக ஆதியில் அப்பரமேஸ்வரன் நாநா விசித்ராத் மகமான ஜகத்துக்களை ஏககாலத்திலேயே நிர்மாணம் செய்யவேண்டுமென்று தன் புத்தியினால் சங்கல்பித்தாரென்று உத்தரமீமாம்சையில் சொல்லியிருக்கிறது. ஆனதினால் இச்சிருஷ்டிக்கு யூகபர்ச் சிருஷ்டி யென்று தனியாயிருக்கிறது இன்னும் இம்மதத்தின் முக்கிய தர்மம் என்னவென்றால் தன் இஷ்ட லிங்கமே பதியும், தானேசதி யென்னும் சதிபதி நியாயத்துடனிருப்பதே லிங்காங்க சம்மந்த மென்று சொல்லப்பட்டது. இன்னும் இந்த இஷ்டலிங்கம் எப்படிப்பட்ட தென்றால்.

சுலோஹம்

லிங்கமத்யே ஜகத்சர்வம் திரைலோக்யம்ச சராசரம்,
லிங்கபாஹ்யம் பரம்நாஸ்தி தஸ்மை லிங்காயவை நம: 1.
லீயந்த கம்யதே யத்ர யேனசர்வம் சராசரம்
தததல்லிங்க மித்யுக்தம் லிங்கத்வ விசாரதை:

அனேக பிரம்மாண்டங்களின் உற்பத்தி ஸ்திதி லயங்களுக்கு ஆஸ்ரயமான மஹாலிங்கமே யிந்த லிங்காயதர் சரீரத்தில் இஷ்டலிங்கமாக நிலைத்து யிருக்கிற காரணத்தினால் இவர்கள் தங்கள் இஷ்டலிங்கத்தையே பூஜிக்க வேண்டுமேயல்லாது அன்னியமான எந்ததேவதைகளையும் பூஜிக்கக்கூடாதென்பதே சித்தாந்தம் இதற்குப் பிரமாணம்,

வீராகம சுலோஹம்.

பதிர் லிங்கம் சதீசாஹம் ஹிருதி யுக்த ஸ்வயம்விபு:
ப்ராபஞ்சிக சுகம்நாஸ்தி சரணஸ்தல முக்தமம் (1)

பத்தியாதிக்கம்.

லிங்காதன்ய சுரார்ச் சனுதி விமுகோ லிங்க பிரசாதோ
பிரபுர் லிங்காலிங்கித விக்கஹா விஜயதேஸ்ரீ வீரமா ஹேஸ்வரா :

இப்படி யிருப்பதே லிங்கயுதர்களின் முக்கிய தர்மமாகும் இன்னுமிப்படிப்பட்ட லிங்கதாரிகளே சர்வோத் கிருஷ்டரென்று சித்தாந்த சிகாமணியில் ஸ்ரீ ரேணுகர் அகஸ்திய மஹரிஷிக்குச் சொல்லி யிருக்கிறார்.

சித்தாந்த சிகாமணி சுலோஹம்.

லிங்கம் சிவாதநு புரோக்தம் யாதெருத்ர சிவாதநு :
காசதெ பரமெசஸ்ய சிஷ்டாஸ்தெ லிங்கதாரிண :
சதுர்வேத சங்க்ரஹெ அபாபகாசிதி வபுஸ்ருதம்தெ
திஷ்டா பிரசித்த பகவன்னபாப : ஆதஸ்ததீயான
பஹாயாபக்தானன்யான சிஷ்டா இதி நிஸ்சிநோமி (2)

(2) வது, பிரஸ்னைக் குத்தரம்.

இப்படிப்பட்ட லிங்கதாரிகளே சிரேஷ்டரல்லாமல் மற்ற யாரும் சிரேஷ்டரல்ல வென்று ஸ்ரீ ரேணுகர் சொல்லி யிருக்கிறார் இன்னும் இம்மதத்தின் நடவடிக்கைகள் எதில் சொல்லியிருக்கின்றதென்றால் அந்த ஆதிபரசிவன் பஞ்சமுகங்களில் பிறந்ததான (28) திவ்யாகமங்களுள் அரசுமோஹகளான (10) ஆகமங்கள் தவிர மற்ற (18) ஆகமங்களிலும் சொல்லப்பட்டிருக்கிறது, அது எப்படி யென்றால்,

சுருதி சுலோஹம்.

அஹமேவ பரப்ரஹ்மா மன்முகோத் பூதாஸ்டா விம்சத்
யாகமேஷு அசுர மோஹ கவேத விருத்தான் தசோபாக
மான்விஹாய சகல வேதார்த்த நிரயாஸ்டா தசாகமா : வதந்தி

(3) வது, பிரஸ்னைக் குத்தரம்

(6) வது, இதில் 4, விபாகங்கள்

இன்னும் இந்தலிங்காயுத மதத்தில் எத்தனை விபாகங்களுண்டு யென்றால் (1) வீரசைவ மென்றும் (2) சாமான்ய வீரசைவ மென்றும் (3) விசேஷ வீரசைவ மென்றும், (4) நிராபார வீரசைவ மென்றும் நான்குவிபாகங்க(பிரிவுக)ளுண்டு, இப்படிநான்குவிபாகங்களாவ தற்குக்காரண மென்னவென்றால் ஒரு கல்பத்தில் பிரஹ்மன் நானே சஹிகர்த்தன் யென்னுலல்லாமல் இச்சிருஷ்டிகாரியம் நடக்கா தென்று தெரிந்து சிருஷ்டி செய்வதற்கு வல்லே னென்றான் அப்பொழுது அப்பரசிவன் தன் ஈசான்ய முகத்தில் ஒருவன் பஞ்சவக்த்ர னென்னும் கணவரனை நிர்மித்து அவனலேயே (4) வர்ணம், (18) ஜாதி (101) குலத்து மனுஷ்யரைப் பிறப்பித்து

அவர்கள் ஸ்திதிலயங்களை அவராலேயே செய்துக் கொண்டகாரணம் அவர்களெல்லோரும் வீரசைவ லிங்கதாரிகளானகாரணம், கிரியாபேதத்தினால் நான்குவிபாகங்களாயினவென்று சிவதாசிமார்ய புராணத்தில் சொல்லி யிருக்கிறது,மற்று மிதற்குமுக்கியபிரமாணம் சுப்பிரபோதாகமத்தில் இந் நான்கு விபாகங்களின் தர்மங்களையும், விஸ்தாரமாய்ச் சொல்லி யிருக்கிறது,

(4) வது, பிரஸ்னைக் குத்தரம்

(7) வது, அன்னிய ஜாதி யாரைச் சேர்க்க

இன்னும் இம்மதத்தில் அன்னிய ஜாதியாருக்குள் எச்சாதியாரைச் சேர்த்துக் கொள்ளலா மென்றால் எச்சாதியவரானாலும் அவர்களில் தாரதம்மிய ஞானத்துடன் விவேகிகளாகி, சிவனே தெய்வ மென்றும் சிவபக்தனே குலத்தவ னென்றும் சிவமதமே சிரேஷ்ட மென்பதற்குப் பிரமாணம்,

சுலோஹம்

வீரசைவம் மஹாசிரேஷ்டம் சர்வ சாஸ்த்ரேஷு விசுருதம்
ஸ்ரீ வீரசைவ சித்தாந்தம் சாஸ்த்ரந்து ஸ்ருதி பூர்வகம்
சாமவேத மஹாவாக்யம் தஸ்ய மஸ்யாதி பாஷிதம் (1)

இப்படிப்பட்ட பிரமாணத்தினால் பக்திஞான வைராக்யமுள்ளவனாக வந்து சரணாகதனானால் அவர்களைத் தமக்குள் சேர்த்துக் கொள்ள எவ்வித சந்தேஹமுமில்லை, இதற்குப் பிரமாணம்,

ஸ்காந்த புராண. சுலோஹம்.

ஸ்வபசோபி முனிசிரேஷ்டோ சிவபக்தி ரதியுக்தவான்
சிவபக்தி விஹீனஸ் செத் பிராஹ்மணாஸ் வபசாதம:

ஆதித்ய புராணம். 64, வது அத்தியாய சுலோஹம்.

பிராஹ்மண க்ஷத்ரியோ வைஸ்யோ சூத்ரஸ்சண்டாலஎம்சவ
சிவபக்த சர்வதா பூஜ்யஸ்ச சர்வபிராஹ்ம ணோத்தம:

என்னும் பிரமாணங்க ளிருப்பதால் ஆதியில் பரமேஸ்வரன் பஞ்சமுகங்களிலுற் பன்னரான பஞ்சாசார்யரே பிரதியுகங்களிலும் பிரதி நாமங்களுள்ளவராக விஷ்ணு பிரமாதி சகலதேவ, தானவ, மநு,முனி,சித்த,சாத்ய,ஷட்சக்ரவர்த்தி, சோடச மஹா ராஜர்களுக்கெல்லாம் சிவதீக்ஷைகளைச் செய்து சிவலிங்கங்களைத் தரிப்பித்து, சிவமந்திரோப தேசங்கள் செய்தகாரணம் அப்பஞ்சாசார்யர்களே இக்கலியுகத்தில், ரேணுகாராத்தியர், மருளாராத்தியர், பண்டிதா

ராத்தியர், ஏகோராமாராத்தியர், விஸ்வாராத்திய ரென்னும் நாமங்களைத்தரித்து பிராமணன் முதல் சண்டாளன் கடையான சகல ஜாதிமனுஷ்யர்களுக்கும் சிவலிங்கதாரணம் மந்த்ரோபதேசங்கள் செய்து மோக்ஷமார்க்கத்தை யறிவித்தார்களென்று சிவாகமங்களில் சொல்லியிருக்கிறது, இதற்குச்சாக்ஷி,

சுப்பிரபோதாகம சுலோஹம்.

அதகலியுகெ ரேணுகாராத்ய மருளாராத்ய பண்டிதாராத்ய
ஏகோ ராமாராத்ப விஸ்வாராத்யதி நாமசமேதைபஞ்சாசார்யா:

பிரஹ்மக்ஷத்ரிய வைஸ்ய சூத்ரான் ஏகசதகுலஜமனுஜான்சிலாமய
லிங்கம் தாரயித்வா மந்த்ரோபதேசேன மோக்ஷமார்க்கம்பிரதர்சயா

இன்னுமிந்த லிங்காயுதர் தம்மஜாதியை விட்டு அன்னிய ஜாதியில் கூடினவரை மறுபடி தமக்குள் சேர்த்துக் கொள்ளலாமென்றால் அன்னிய ஜாதிகளில் உத்தமம், மத்திமம் கனிஷ்டம் அதமம் அதமாதம மென்று அநேக தாரதம்மியங்களிருக்கும். அவை எப்படி யென்றால் பிரமம க்ஷத்ரிய வைஸ்ய, சூத்ர மிலேச்ச புல்கிச சண்டாள ரென்று அநேகம் கீழ்மேலாயிருக்கும், இன்னுமிவ்வுலகில் லிங்காயுதர் ஜாதியே வெகுசிரேஷ்ட மென்று சகல சாஸ்திரங்களில் சொல்லியுள்ள காரணம் பிராஹ்மணாதி சண்டாள கடையான எல்லா ஜாதிகளும் இச்சாதிக்குக் கீழ்பட்டதென்றே தெரியவேண்டியது, இன்னுமிச்ஜாதிகளிலிரண்டு ஜாதிகளே முக்கியமாயிருக்கும், அவை எதுவென்றால் பக்தஜாதி யென்பதொன்று, பவிஜாதி யென்பதொன்று, இவையிரண்டு ஜாதிகளே முக்கியமா யிருக்கும், பக்தஜாதி யென்றால் லிங்கதாரிகள், பவிஜாதி யென்றால் அலிங்கிகள் இப்படிப்பட்ட அலிங்கிகளான பிராம்மணாதி சண்டாளர்கடையான எல்லா ஜாதிகளையும் ஒரே பவிஜாதி யென்றே யறியவேண்டியது, இதற்குப் பிரமாணம்

(5) வது. பிரஸ்னைக் குத்தரம்

வீரசைவ உத்கர்ஷே, சுலோஹம்

பிராக்ருதா பிராக்ருதஸ்சேதித் விதாமானுஷாஸ்மிருத:
பிராக்ருதா பவினஸ்சர்வெ வைக்ருதா லிங்கதாரிண:

இப்படியான காரணம் இந்த லிங்காயுத ஜாதியார்கள் யெச்ஜாதியில் கூடினாலும் அவர்கள் பவிகளே, இன்னுமிவர்கள் எப்படிப்பட்ட பவிகளென்றால் பவிகளுக்கு ளிரண்டு விதமுண்டு, அதெப்படியென்றால் பிறவி பவியென்றும், கெட்ட பவியென்றும், இருவிதமான பவிகளுக்குள் பிறவி பவிகளைச் சிவபக்தர் தீக்ஷை செய்து தமக்குள் சேர்த்துக்கொள்ளலாம், இப்படிப்பட்ட கெட்

டபவிகளைத் தமக்குள் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்பதே புராதனர்களின் வசனப்பிரமாணமிருப்பதால் இப்படிப்பட்ட ஜாதிகெட்ட ஜாதிப்பிரஷ்டரும், ஸ்கலிதரும், பதிதரும், துராசாரிகளும், குலகேடிகளுமான இப்படிப்பட்ட நாமதேயமு(பெயரு)ள்ளவர்களே கெட்டபவிகள். இப்படியான பவிகளைத்தமக்குள் சேர்த்துக்கொள்ளக் கூடாதென்பதே சித்தாந்தம் இதற்கு உலக திருஷ்டாந்தமென்னவென்றால், எங்ஙனம் பால் லவண சம்யோகத்தினால் (உப்பின் கூட்டுறவினால்) கெட்டால் மறுபடியு மெப்படிப்பட்ட பிரயத்தினத்தினாலும் முதலிலிருந்ததைப்போல நல்ல பாலாவதில்லையோ அப்படியேயிதுவும் கூடாது, இதற்குச் சாஸ்திர திருஷ்டாந்த மென்னவென்றால் இந்தலிங்காங்கிகளான வீரசைவர்களுக்கு லிங்கோபவிருத லோபங்களில் பிராணத்பாகமல்லாது பிராயச் சித்தமில்லையென்று நிஜகுணாராத்திரியர் விவேக சிந்தாமணி யென்னும் கிரந்தத்தில் சொல்லியிருக்கிறார், மற்றொரு பிரமாணம்.

சுலோஹம்

ஆசனே சயனே யானெ சம்பர்க்கே ஸஹபோஜனே
சம்சரந்தெ மஹாகோரே நரகே காலமக்ஷயம்

லிங்காங்கிகள் பவிகளுடன் ஏககாலத்தில் உட்காரக்கூடாது ஒரே வழியிலிருவருங்கூடி சமமாக நடக்கலாகாது, ஒரே ஆசனத்தில் படுக்கக்கூடாது, இருவரும் சம்பர்க்கவம் செய்யக்கூடாது, பவியும், தானுங்கூடி போஜனம் செய்பலாகாது, இப்படிக்கேதாவதொருசமயம் செய்தால் அனேககோடிகாலம் நரகத்தில் விழுவானென்று சிவாகமங்களில் சொல்லப்பட்டதி னிமித்தம் இப்படிப்பட்ட கெட்ட பவிகளை எம்மாத்திரமானாலும், சேர்த்துக்கொள்ளக் கூடாதென்பதே (1)-வது நிபந்தனையில் சொல்லப்பட்டது, இன்னுமிரண்டாவது நிபந்தனையில் இப்படிப்பட்ட கெட்ட பவிகளை சிலகாலங்களுக்குமேல் தங்கள் ஜாதியில் சேர்த்துக்கொள்ளலாமென்று சொல்லும், இதற்குள் கெட்டவர் யார்யாரென்றால் (1)-வது முண்டை (விதவை) மக்கள், அதாவது தன் புருஷனிறந்த பிறகு அன்னிய புருடரினால் பிறந்த பிள்ளைகள், இவர்களுக்கு முண்டையசந்தானமென்றுசொல்வது, இவர்கள் (3) தலாந்தரத்திற்குமேல் சுத்தராவார்கள், பிறகு அவர்களை பிராயச்சித்தஞ்செய்து தங்கள் குலத்தில் சேர்த்துக்கொள்ளலாம் (2)-வது ரெண்டைய மக்கள், அதாவது கலியாணமாகாத கன்னிகை வயிற்றில் வியபிசாரத்தினால் பிறந்த பிள்ளைகள், இவர்களுக்கு ரெண்டைய சந்தானமென்றும், சோவி சந்தானமென்றும், கானீன சந்தானமென்றும், மூன்று விதமாகச் சொல்வது இவர்கள் (6) தலாந்தரத்தின்மேல் சுத்தராவார்கள், பிறகு இவர்

களை பிராயச்சித்தம்செய்து தங்களுக்குள் சேர்த்துக்கொள்வது இன்னும் (3)வது கௌடிகெ சந்தானமென்றால் பாணகித்தி தாசி, வேசி, பேடி, பசவி இவர்களின் குழந்தைகளை கௌடீ சந்தானமென்றும், சிடிகா சந்தானமென்றும், இருவிதமாகச்சொல்வது, இவர்கள் (12) ஜன்மத்திற்குமேல் சுத்தராவார்கள், பின்பு இவர்களை ஜாதியில் சேர்த்துக்கொள்ளலாம், இன்னும் கௌடி சந்தானத்தின் வகை பிரத்யக்ஷ உலகாநுபவ திருஷ்டாந்தமாவது,இவ்வீரசைவ மதோற்பத்தியில் விவரிப்பதென்னவென்றால் பூர்வத்தில் பல்லாரி பிராந்தியத்தில் எலமரின் சம்மந்தமான வஜ்ரநாடி ரெட்டிஜாதி புருஷனின் வீட்டில் போனகித்தி என்றால் ரெட்டியின் சம்யோகத்தினால் புத்திர பவுத்திர சந்தான முண்டாகவும், அச்சந்தானம் மிசிரகுலங்களினால் பிறந்தகாரணம் ஜாதிகெட்ட இச்சந்தானத்திற்கு அந்த ஸ்த்ரீபுருஷ ஜாதிகளின் பாதி பாதி பெயர்கள்சேர்ந்து இம்மிசிரசப்தங்களாயிற்று, எப்படியென்றால் புருஷன் வெலமரின் சம்மந்தமாகியும். வஜ்ரநாடி ஜாதியாகியும், மற்றுமந்த ஸ்த்ரீபோசகித்தி என்றால் ஹண்டெயளாகியும், கௌடீயாகியுமிருந்தகாரணம், இக்கௌடி சந்தானத்தவருக்கு ஹண்டெமெயென்றும், ஹண்டெவஜ்ர வக்கலிகரென்றும் கௌடீ மக்களென்றும், வஜ்ரநாடி வக்கலிகரென்றும், அநுபவ சப்தங்களாயிற்று, இப்பூர்வ பெயர்களிப்போது உலகா நுபவத்தில் கெட்டு கிராம்ய சப்தங்களாயிருக்கலாம், இச்சந்தானத்தவருக்கு வஜ்ரநாடி ஜாதியபுருஷனின் அம்மசங்களையே முக்கியமாயிருந்ததினால் வஜ்ரநாடி வக்கலிகரென்பதற்கு காரணபூதராயிருந்தார்கள். மற்றுமிச்சந்தானம் "கலியுக: குசப்ரபல" கலியுக: குஜனபல,, என்னும் நியாய சாஸ்திரபிரமாணமாக உண்டாயிருக்கிறது. இச்சந்தானத்தின் அபிவிர்த்தியைப் பார்த்தால் 12 தலாந்தரத்தை விடமும்மடி தலாந்தரங்கள் மீரிப்போயிருக்கலாமெனக் காணப்படுகிறது, இப்படிப்பட்ட ஜாதியின் ஜனங்களை (12) தலாந்தரம் வரைக்கும் வேறுசக்கக்கூடாது, (12) தலாந்தரம் மீரினால் மிசிரஜாதியின் தோஷம் நியாய சாஸ்திர பிரகாரமாக பரிஹாரமாகிறது, இச் சந்தானத்து ஜனங்களின் வாசஸ்தானம், இப்போதும் துங்கபத்ரா நதியையடுத்த பிரதேசங்களில் சிலவிடங்களிலுண்டு, த்ரோண நதியின் (டோணி) பக்கத்து பிரதேசங்களில் விசேஷமாயிருக்கிறார்கள், மற்றும் கப்படி ஜங்கபேஸ்வர புண்யக்ஷேத்திர சமீபத்தில் சிற்சில விடங்களிலுமிவர்கள் வாசமாயிருக்கிறார்கள், லவளகொண்ட ஜாதியைப்போல இச்ஜாதியும் பூர்வத்திலில்லாமல் மத்தியில் பிறந்த காரணம் புராண இதிகாச முதலானவைகளில் நிச்சயார்த்தத்துடன் பிரசித்தமாயிருப்பதில்லை, ஹண்டெயென்றால் சேவாவிருத்தி செய்யத்தக்க ஸ்த்ரீக்குப்பெயராகும். இச்சப்தம் அமரகோச கிரந்தத்தில், நாட்

டியவர்க்கத்துள்பார்த்து தெரியவும், மற்றும் வெலமரென்னும் ரெட்டியரின் சம்மந்தமான மடமடி சிடமுட நரவால் ஞெட்ட முசகினவரென்னும், முதலான பெயர்கள் பிரஹ்மாண்ட புராணத்தில் வேறு நாமங்களிலடங்கியிருக்கும் மாதிரி இவ்வஜ்ரநாடியென்னும் சப்தம் வேறு பாண்ட்யக ளன்னடவென்னும், சப்தத்துடன் அடக்கமானதாகத் தெரியவருகிறது. இக்கிரந்தத்தில் வீரசைவ மதோற்பத்தியின் நிர்ணயத்தை விசேஷமாக விவரிப்பது முக்கியமாயிருப்பதால் மேற்சொன்ன பெயர்களின் நிச்சயார்த்தத்தை அதிகமாகச்சொல்லவில்லை.

(4)-வது இன்னும் தம்மஜாதியாசாரத்தை விட்டு அன்னிய ஆசாரத்தில் நடந்தவர்களைத் தமக்குள்சேர்த்துக்கொள்ள வேண்டுமானால் (60) வருடபரியந்தம் வேறாகவிட்டுப் பிறகு தமது ஜாதியில் சேர்த்துக்கொள்ளலாமென்று புராதனரின் கதம்பம் முதலான சிலவசனசாஸ்திரங்களில் சொல்லியிருக்கிறது, இதற்கு உலக திருஷ்டாந்த மென்னவென்றால் உலகத்தில் மனிதர்கள் தாம் தின்பதற்காக பெலாக்காய், மாங்காய், விழாங்காய், அறுப்பார்கள், இப்படிப்பட்ட காய்களை யவர்களறுத்தவுடனே சாப்பிட உதவுகிறதில்லை, யாகையால் அப்படிப்பட்ட காய்களை ஒருவீட்டில் தனியாக வைத்தால் சில நாட்களுக்குமேல் தானே பக்குவமாய்விடும், அப்படிப்பக்குவமான காய்களுக்குள் எந்தெந்தக் காய்களுக்கு எவ்வளவெவ்வளவு நாட்களென்றால் பெலாக்காய் (4) நாளிலும், மாங்காய் (8)நாளிலும், விழாங்காய் (15)நாளிலும், பக்குவமாகும், இப்படிப் பக்குவமான பழங்களைச்சாப்பிட்டால் வாய்க்கு ருசியாயிருக்கும்,மூக்கிற்கும் வாசனை வெகு நன்றாயிருக்கும்,மற்றும் சரீரத்திற்கும் வெகு இதமாயிருப்பது யெப்படியோ அப்படி,இக்கெட்ட பவிகளையும் சிலகாலங்களுக்கு மேல் தான் பரிபக்குவமுள்ள இருதயமுள்ளவர்களாவார்கள், பின்பு அவர்களைத்தங்கள் ஜாதியில சேர்த்துக்கொள்ள எவ்வித சந்தேஹமுமில்லை, இதற்குச்சாக்ஷி

(8) வது, ஜன்மம், சைவ புராண சுலோஹம்

ஜீவயோனி சஹஸ்ரேஷு பூத்வா சங்க்யாந்த்ய ஜாதிஜ:
அந்த்யம் ஜாதிச்சதஸ் சூத்ரோ-சூத்ரோ பாபம்ச விம்சதி:
தத்வைஸ்ய சோட சோராஜா தத்ர ஜனன மத்விஜ:
தித்வி ஜாஷ்டஞ்ச பக்தஸ்ஸ தத்பக்த ஸ்ரீணிஜங்கம:
ஜங்கமோ ருத்ர ரூபந்து புனர்ஜ ஜன்ம னவித்யதே

இதினர்த்த மென்ன வென்றால் எறும்புகடையானை முதல் கிருமி கீடபதங்க பசு பக்ஷி முதலான ஜீவராசிகளுக்குள் ஒவ்வொரு ஜீவனின் யோனியில் ஆயிர மாயிரம் தடவை பிறந்து பிற

ஸ்ரீ வீரபத்திரகுருவே நம:

## சிவ சர்வோத்தமத்வம்

*யதாதமஸ்தன்ன திவாந ராத்ரிர்ன சன்ன சாசச்சிவ ஏககேவலம்*
*ஏக ஏவருத்ரா நத்விதீயாய தஸ்தே,,*
*உமா சஹாயம் பரமேஸ்வரம் பிரபும்,,*

இத்தியாதி யனேகவேதவேதோபநிஷத்துவாக்கியங்களில்சிவனே அநாதி மூர்த்தி என்றும், அவனே பரப்பிரஹ்ம மென்றும், சக்தி விசிஷ்டனென்றும், தீர்க்க தொனியுடன் சொல்லுகின்றன. சக்தி விசிஷ்டனான அப்பரசிவமூர்த்தியினாலேயே சராசராத்மகவாதீ ஜகத்து நிர்மிதமாயிருக்கிறதென்று, ஸ்ரீ காலக்ஞானிகளான அநேக மஹரிஷிகள் தங்கள் தங்கள் கிரந்தங்களில் பிரதிபாதித்திருக்கிறார்கள். விஷ்ணு, பிரஹ்மன், இநதிரன், குபேரன். முதலான தேவதைகள் அப்பர மாத்மனின் உபாசனையினாலேயே தமக்குப் பிராப்தமாயுள்ள அமூல்யஸ்தானங்களையலங்கரித்தார்களென்று வியாசமஹரிஷிதான் எழுதின ஸ்காந்தாதிபுராணங்களில் எழுதியிருக்கிறார், சமஸ்ததேவதைகளுக்கும்கூட சிவனே உபாசனா மூர்த்தியா யிருப்பதால் அச்சிவனுக்கு மஹாதேவ னென்னும் நாமம் அன்வர்த்தமாகி பிராப்தமாயிருக்கிறது. பூர்வகாலத்தில் பரதகண்டத்தில் இருந்த சமஸ்தயோகிகளும் சக்கிரவர்த்திகளும், மானவர்கள் முதலான அனேகர்கள் சிவனே சர்வோத்தம னென்று நம்பி அவரின் சுரூபமான சிவலிங்கமூர்த்திகளைப் பிரதி யொரு ஸ்தானங்களிலும ஸ்தாபித்து, அவரின் உபாசனையை நிஸ்சீமபக்தியினால் செய்து கைவல்லியசுகத்தையநுபவித்தார்கள், புராதன மஹரிஷிகள் சிவலிங்கமூர்த்திகளை ஸ்தாபித்து பூஜித்த மாதிரி மற்றெந்தமூர்த்திகளையாவது ஸ்தாபிக்கவில்லை. அப்படி பூஜிக்கவுமில்லை.

உலக விக்யாதரான வியாசமஹரிஷி தான் ஆதியில் விஷ்ணு பக்தனாகி விஷ்ணுவேதேவோத்தம மென்று சொல்லிக்கொண்டு காசி க்ஷேத்திரத்திற்குப் போய் விஸ்வநாதர் தேவாலயத்திலுங்கூட "நதேவ, கேசவாத்பர:, என்று விஷ்ணுவின் ஆதிக்பத்தைப் பாடவும், நந்தீஸ்வரனால் ஹஸ்தஸ்தம்பனமடைந்து அசாதாரணமான (ஒருவருமடையக்கூடாத) துக்கத்திற்கிடாகி தன் உபாசனா தேவதையான விஷ்ணுவினாலேயே சிவசர்வோத்கமத்தைத் தெரிந்துக்கொண்டு சிவனைத்தியானித்து பந்தனத்திலிருந்து விடுதலையடைந்து கங்காநதி தீரத்தில் தன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவனால் தனக்குப் பிராப்தமான தோஷத்தினால், முக்தனான விஷயத்தைத்தானே காசிகாண்டத்தில் ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார். இந்தலிங்கம் வியாசேஸ்வர னென்னும் பெயரி

னால் தற்போதும் வியாச காசியில் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, இதல்லாமல் அஷ்டசித்திகளையு மடைந்து மஹாமஹிமை சாலியென ஜகத்பிரசித்தனான அகஸ்திய மஹரிஷிபுங்கூடதன் பெயரால் ஒரு சிவலிங்கத்தை ஸ்தாபிதம் செய்து அச்சிவலிங்க உபாசனையினால் சப்தசமுத்திரபான முதலான அற்புத காரியங்களைச் செய்து உலகமானியனான அம்மஹரிஷியினால் ஸ்தாபிக்கப்பட்ட லிங்கம் அகஸ்த்யேஸ்வர னென்னும் பெயரால் இப்போதும் காசி க்ஷேத்திரத்திலிருக்கிறது, இம்மாதிரியாகவே கௌதமர், கஸ்யபர், கபிலர், மார்க்கண்டேயர், வசிஷ்டர், விஸ்வாமித்திரர் முதலான மஹரிஷிகளுங்கூட தங்கள் பெயர்களினால் சிவலிங்கங்களை ஸ்தாபித்து நித்தியசுகங்களை யநுபவித்தார்கள், இந்தலிங்கங்கள் கௌதமேஸ்வரர், கஸ்யமேஸ்வரர், கபிலேஸ்வரர், மார்கண்டேஸ்வரர், வசிஷ்டேஸ்வரர், விஸ்வாமித்ரேஸ்வர், முதலான பவித்ராபிதானங்களினால் தற்போதும் காசிக்ஷேத்திரத்தில், பிரகாசித்துக் கொண்டிருக்கிறது, ஈதல்லாமல், விஷ்ணுவும் கூட தானெடுத்த தசாவதாரங்களிலும், ஒவ்வொரு சிவலிங்கத்தை ஸ்தாபித்துப் பூஜித்துத் தன் இஷ்டார்த்தத்தை யடைந்தா னென்று அநேகாநேக புராணங்களில் எழுதப்பட்டிருக்கிறது, ராமாவதாரத்தில் ஸ்தாபித்த ராமேஸ்வர லிங்கத்தின் விஷயம சர்வருக்கும் தெரிந்ததேயாயிற்று மச்சாவதாரத்தில் மச்சேஸ்வர னென்னு மொரு லிங்கத்தை ஸ்தாபித்தான், இந்த லிங்கம் லங்காபட்டணத்தில், சோபித்துக் கொண்டிருக்கிறது. கூர்மாவதாரத்தில் கூர்மேஸ்வரனென்னு மொரு லிங்கத்தை ஸ்தாபித்தான், மற்றும் இவைகளல்லாமல் ஒரு சமயத்தில் சிவனின் பாதகமலங்களை சஹஸ்ர கமல (புஷ்ப) ங்களினால் பூஜித்துக் கொண்டிருக்கும் போது ஓர் நாள் சிவனின் மாயையினால் ஒரு கமலம் (தாமறைபூ) குறைய அப்பொழுது விஷ்ணு தான் கைக்கொண்ட பூஜாகாரியம் சம்பூர்ணமாகவில்லையென்று நினைத்துத்தன் நேத்திரகமலத்தை தாமறைப் புஷ்பத்திற்குப் பதிலாக சமர்ப்பித்துப் பூஜையைமுடித்தான் ஆனதால் சிவன் பிரசன்னமாகி சுதர்சனசக்கிர மளித்து மறைந்தான், என்னும் விஷயம் புராணாதிகளில்சுப்ரசித்தமாயிருக்கிறது இதைப்போலவே பிரஹ்மன், இந்திரன், சந்திரன் முதலான தேவதைகளுங்கூடசிவனைப் பூஜித்தும் தரித்தும், அசாதாரண (ஒருவருமடைய முடியாத) சுகத்தையடைந்தார்கள். இத்தேவர்கள் சிவலிங்கத்தைப் பூஜித்தல்லாமல் சதா (எப்பொழுதும்) சிவனுடைய சம்மந்தம் தங்கள் சரீரத்திலிருக்க வேண்டு மென்றுப் பாவித்து, அச்சிவலிங்கமூர்த்தியைச் சரீரத்தில், தாரணம் செய்து கொண்டிருந்தார்களென்று காபசாஸ்திரங்கள் சொல்லுகின்றன, இவ்விஷயத்தில்.

விஷ்ணு பிரம்மாதயோதேவாமுனயோ கௌதமாதய :
தாரயந்தி சதாலிங்க முத்தமாங்கே விசேஷத :

இத்யாதி சுலோகங்களே பலமான பிரமாணங்களாயிருக்கின்றன, இச்சுலோக அபிப்ராயத்தை யோசிக்கில், இது நிஜமென்றே காணுகிறது, இவ்விஷயத்தில் ஜகத் பிரசித்தனான பண்டரீபுரத்தின் விடோபாநாமகமான விஷ்ணு மூர்த்தியின் மஸ்தகத்திலும், பார்சி பட்டணத்திலுள்ள பகவந்தநாமகமான விஷ்ணுமூர்த்தியின், மஸ்தகத்திலும், மற்றும், திருவாங்கூர் (திருவனந்தபுரம்) சமஸ்தானத்திற்கு முக்கிய ராஜதானியான அநந்தசயனம் பட்டணத்திலுள்ளதும் அம்மஹாராஜரின் குலதேவதையான அநந்த பத்மநாபர் என்றும் விஷ்ணுமூர்த்தியின் ஹஸ்தத்திலிருக்கும் சிவலிங்கதாரணமே பலமானசாக்ஷியாயிருக்கிறது,

சுலோஹம்

அநந்தபத்மநாபஸ்ய ஹஸ்தகே லிங்கஸ்யதாரணம்
பாண்டுரங்கே ததாவிஷ்ணோ : சீர்ஷே லிங்கஸ்ய தாரணம்

சிவாஜி மஹாராஜனின், குருவான துக்காராம் சுவாமிகள் தங்கள் கீதாகிரந்தத்தில், 'விடோபாச்யாமஸ்க்கே லிங்கதாரணம், என்றுச் சொல்லி யிருக்கிறார், பண்டரீபுரம் விடாபா மூர்த்தியும், பார்சி பட்டணம் பகவந்த மூர்த்தியும் மைசூர் ராஜதானியில் கொள்ளேகாலத்திற்குச் சமீபமாக அடவியில் வேங்கைப் புலி வாகனத்தின் மீதமர்ந்துள்ளதும், மிகபிரபலமானதும் அதிசக்தி வாய்ததுமான, மாதேசப்பன், என்னும் மூர்த்திக்கு கழுத்தில் சிவலிங்கதாரண மிருப்பதா லம்மூர்த்தியும் வீரசைவ மூர்த்தி யெனத் தெரிய வருகிறது. இம்மூர்த்திகள் வெகு புராதன காலத்தில் ஸ்தாபிதமான வைகளாயிருக்கின்றன, இவைகளைப் போலவே பூர்வகாலங்களில் ஸ்தாபிதமான எல்லாத் தேவதைகளின மஸ்தகத்தில் சிவலிங்கதாரணமுள்ள விஷயம், சோண்டூர் குமாரசுவாமி, துளஜாபுரம் பவானி, குட்டாபுரம் தானம்ம, முதலான தேவதைகளினால் வியக்தமாகிறது, இவ்வெல்லா விஷங்களையும் பரியாலோசனை செய்துப் பார்க்கில் சிவனே சர்வோத்தம னென்றும், அச்சிவ பூஜாதாரணாதிகளினாலேயே சகல சித்திகளும் கிடைக்கு மென்றும், ஸ்பஷ்டமாகிறது, பூர்வகாலத்தில் திராவிடதேசத்தில், சிவபக்தர்களான வீரசைவர்கள் விசேஷமாக வாசம் செய்து கொண்டிருந்தார்களென்றும் ராமநுஜா சார்யரின் பிரபல்யத்தினால் வீரசைவரின் ஜனசங்கை குறைந்து வந்து கடைசியில் க்ஷீணாவஸ்த்தைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது, ராமாநுஜாசார்யர் ராஜரின் சஹாய விசேஷத்தாலோ அல்லது வேறெந்தக் காரணத்தினாலோ அத்யந்த பிரசித்தங்களான சில சிவ

சம்மந்தமான தேவாலயங்களைத் தம் சுவாதீனமாக்கிக்கொண்டு அத்தேவாலயங்களில் விஷ்ணுவிக்கிரங்களை ஸ்தாபித்தாரென்றும் இன்னும் சில சைவ விக்கிரகங்களையே விஷ்ணுவிக்கிரகங்களாகச் செய்தாரென்றும் கிரந்தாதாரங்களினாலும் இன்னும் பிரத்யக்ஷா நுபவங்களினாலும் தெரியவருக்கிறது, இவ்விஷத்தில் திருப்பதியிலிருக்கும் வெங்கடரமண தேவாலயமே பலமான சாக்ஷியாயிருக்கிறது, வெங்கடரமண விக்ரஹம் விஷ்ணு விக்கிரக மல்லவென்றும் அவ்விக்கிரஹம் வீரபத்திர சுவாமியின் விக்கிரஹமென்றும் வீரபத்திர சுவாமி விக்கிரஹத்தையே ராமாநுஜாசார்யர் விஷ்ணு விக்கிரகமாகச் செய்தாரென்றும் ஸ்ரீபதிபண்டிதர் தாம் எழுதின, ஸ்ரீகரபஷ்யத்தில்ஸ்பஷ்டமாக எழுதியிருக்கிறார், அதாவது,

. நநுவெங்கடேஸ்வர விடலேஸ் வரஸ்தானே
விஷ்ணோர்ஸ்வா சப்த சிராவணத் பரசுா மவதாரே
தஸ்ய பிராஹ்மண குலசம்பவ ஸ்ரவணாத்
கதம் க்ஷத்ரியத்வ மூபதிஸ்யதே இதி சின்ன
வெங்கடேஸ்வரஸ்யா பாச விஸ்ணுத்வம்
ததங்க நாகபூஷணாதி தர்யாணுபத்யோதனாத்
மூலவிக்ரஹே சங்கசக்ராதி லாண்டனா நாமதர்சனாத்
வீரேஸ்வரஸ்ய ராமாநுஜகல்பித வெங்கடேஸ்வரத்வம்
ரஜ்ஜு சர்ப்பவதா பாச மாத்ரமேவ

இப்பாஷ்ய சுலோகத்தை விசாரிக்கில் திருப்பதி க்ஷேத்திரத்திலுள்ள மூர்த்தி வீரபத்திர மூர்த்தி என்றும் அம்மூர்த்திக்கு விஷ்ணுவின் முக்கிய அடையாளங்களான சங்குசக்ராதிகளிருப்பதில்லை என்றும், அம்மூர்த்தி சர்ப்பாபரண பூஷிதமாக யிருப்பதென்றும் காணப்படுகிறது, இப்பாஷ்யக்காரரின் வார்த்தைகள் நிஜமா, பொய்யவென்று விசாரிப்பது சர்வரின் முதலாவது கர்த்தவ்வியமாயிருக்கிறது, திருப்பதிக்ஷேத்திரத்தைப் பார்த்து வந்த அநேக ஜனங்களை விசாரித்ததில் அவ்விடமுள்ள வெங்கிடரமண சுவாமிக்குக் கழுத்தில் சர்ப்பம் சுற்றிக்கொண்டிருப்பது நிஜமென்றும் கையில் கல்லினாலாக்கப்பட்ட சங்குசக்ராதிகளில்லாமல் உலோகத்தினால் தயாரித்த சங்குசக்கரங்களை வைத்திருக்கிறார்களென்றும். இன்னும் பிரதிதிங்கட்கிழமைகளிலும், மார்கழி மாதம் 30-நாளும், வில்வார்ச்சனை நடப்பதாகவும் சொல்லுகிறார்கள். ஆனதினால் ஸ்ரீபதிபண்டிதர் பிரத்யக்ஷமாக அவ்விக்கிரஹத்தை தின் எல்லாசுரூபங்களையும் தெரிந்துக்கொண்டே தம் பாஷ்யத்தில் யதார்த்த விஷயத்தை எழுதியிருக்கிறாரென்றுஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது,உலகத்திலனந்தவிஷ்ணுமூர்த்திகளிருக்கின்றன, எந்த விஷ்ணுமூர்த்தியிடத்திலாவது, சர்ப்பாபரண பூஷிதமும் சக்குசக்கரமில்லாமையும் காணப்படுவதில்லை, ஆனால் வெங்கடரமணனுக்கு

சர்ப்பாபரணமிருப்பதினாலும் சங்குசக்கிரங்களில்லாமலிருப்பதினாலும், அம்மூர்த்தி வீரபத்திரமூர்த்தி என்றே சொல்லவேண்டியதாகிறது, இந்த வெங்கடாரமணமூர்த்தியை இப்பொழுதும் சில லிங்கதாரிகள் வீட்டுத்தெய்வமென பக்தியுடன் நடந்துக்கொள்ளுகிறார்கள், வீரசைவர்கள் விஷ்ணுமூர்த்தியை வீட்டுத்தெய்வமாக என்றைக்கும், எடுத்துக்கொள்வதில்லை, அம்மூர்த்திபூர்வகாலத்தில், வீரபத்திரமூர்த்தியாயிருந்ததினாலும் அம்மூர்த்தியே சிலருக்கு வீட்டுத்தெய்வமாயிருந்ததினாலும், வீரபத்திரதேவனென்னும் நாமம் நஷ்ட(லோப)மாகி வெங்கடரமணனென்னும் நூதனப் பெயருண்டாகி விஷ்ணு அடையாளங்களினால் யுக்தமானாலுங்கூட அம்மூர்த்தியிடத்துத் தாங்கள் வைத்தபக்தியைவிடாது தற்போதையவரைக்கும், நடந்துக் கொண்டு வந்திருக்கிறார்களென்று ஸ்பஷ்டமாகிறது இதேமாதிரியாக ராமாநுஜாசார்யரின் காலத்தில்ஜனங்கள் அபிப்ராயப்படும் படியான அநேகானேக வித்யாசங்களாயிருக்க வேண்டுமென்று யூகிக்கவேண்டியதாயிருக்கிறது, பூர்வத்தில் திராவிடதேசம் வீரசைவ (லிங்காயுத)ருக்குத் தாய் வீடாக இருந்தது, இத்தேசத்தில், அநேகானேக பண்டிதர்கள் ஜனித்து வீரசைவ (லிங்காயுத) மதவிஷயத்தில் அனந்தாநந்த கிரந்தங்களை யுண்டாக்கியிருக்கிறார்கள், இப்படி வீரசைவ மயமாயிருந்த திராவிட தேசத்திலிப்போது எங்கேயோ ஒவ்வொரு வீரசைவர் வாசமாயிருப்பதைப்பார்த்தால், அதிவியசனமாகிறது, பரதகண்டத்தில் சர்வோத்கிருஷ்டமாக வியாபித்திருந்த வீரசைவ (லிங்காயுத) மதம் சிற்சிலஅரசர்களின் காலத்திலுமிப்படியே அபவாதமாகி (நஷ்டமாகி) க்ஷீணதசையடைந்து வந்திருக்கிறது, பரமாத்மன் இம்மதத்திற்குப் பூர்வகாலத்தைப்போல சமஸ்த வைபவத்தைக் கொடுத்து, இம்மதத்தை சர்வோத் கிருஷ்டமாகப் பிரகாசப்படுத்துமாறு அநுக்கிரகிக்கவேண்டுமென இச்ஜெகன் நியாமகனைப் பிரார்த்திக்கிறோம்.

(10-12-28. மைசூர், பஞ்சாசார்ய பிரபா பத்திரிகை)

# பஸ்ம (விபூதி) தாரணம்.

விபூதிர்ப் பசிதம் பஸ்ம க்ஷாரம் ரக்ஷேதி பஸ்மந :
ஏதானி பஞ்ச நாமானி ஹேதுபி : பஞ்சபிர் புருசம்

என்னும் வீரசைவ சித்தாந்தத்தின்படிக்கு பரமபவித்ரமான பஸ்மமானது, விபூதியென்றும், பசிதமென்றும், பஸ்மமென்றும், க்ஷாரமென்றும், ரக்ஷையென்றும், ஐந்துநாமங்களை யடைந்திருக்கிறது, இவ்வைந்துநாமங்களும் அப்பஸ்மத்திலுள்ள ஒவ்வொருமஹத்வ குணங்களினால்வந்தவைகளாகும், "விபூதிர்ப்பூதிஹேதுத்வாத்" அஷ்டைஸ்வர்யங்களுக்குக் காரண பூதமானதினால் விபூதி என்றும், "பசிதம் தத்வபாசனாத்," பரசிவ தத்துவத்தைப்பிரகாசப்படுத்துவதால் பசிதமென்றும், "பாபாநாம் பர்ச்சனாத் பஸ்ம" காயகட், வாசகம் மானசங்களான பாவங்களை எல்லாம் ஓட்டுவதால் பஸ்மமென்றும், "க்ஷரணாத் க்ஷாரமாபதாம்" அத்யாத்மிகாதி விபத்துகளைப்போக்குவதினால் க்ஷாரமென்றும், "ரக்ஷணாத்சர்வபூத்யேப்யோ ரக்ஷேதிபரிகீயதே" பூதப்பிரேதப் பிசாசாதிகளினாலுண்டாகும் பயத்தை நீக்கி காப்பாற்றுவதால், ரக்ஷையென்றும், இவ்வோரே விபூதியானது ஒவ்வொரு தர்மங்களினால் இம்மாதிரி ஐந்து பெயர்களையடைந்திருக்கிறதென்று ஸ்ரீரேணுகபகவத்பாதர் அகஸ்திய மஹரிஷிக்கு விபூதியின் மஹத்வத்தை விஸ்தாரமாகப் போதித்திருக்கிறார், ஆகையாலெல்லோரும் பக்திபூர்வகமாக

பிராதக்காலேச மத்யான்ஹே சாயாஹ்னே சத்ரிபுண்ட்ரகம்
கதாசித் பஸ்மனா குர்யாத்ச ருத்ரோநாத்ர சம்சய :

என்னும் பிரமாணத்திற் கநுகுணமாக பிராதக் காலையிலும் மத்தியான காலத்திலும் சாயங்காலத்திலும், தங்கள் தங்கள் நெற்றியில் விபூதி அணிபவர்கள் சாக்ஷாத் ருத்ரஸ்வரூபிகளாகிறார்கள், இதிலெவ்வித சம்சயமுமில்லை, எனப்போதித்த ஆசார்யர்கள் பஸ்மதாரணத்தில் தங்கள் சஹஜ பிரேமையை எம்மட்டில் சொல்லியிருக்கிறார்களென்பதையாவது கண் திறந்துப்பார்த்து பஸ்மத்தின்விஷயத்தில் தங்கள் நம்பிக்கையை வைத்து, ஆசார்யபகவத்பாதருடைய பக்தரென்னும் நாமத்தையடைந்து தாங்களும் வீரசைவ (லிங்காயுத) ர்களென்பதை ஸ்தாபித்துக் கொள்வதே பிரதியொருலிங்காங்கியின் பிரதம (முதலாவது) தர்மமாயிருக்கிறது, ஒன்றேஒன்றான பிராணவாய்வானது ஹிருதயாதி ஸ்தானங்களிலிருந்துக் கொண்டு

வேறுவேறு காரியங்கள் செய்வதால் பிராணனென்றும், அபான னென்றும், வியானனென்றும், சமானனென்றும், உதானனென்றும் பஞ்சநாமங்களை யெப்படியடைந்திருக்கின்றதோ அதைப்போல வே சுருதி யுக்தமான பஸ்மம் ஈஸ்வரனின் சத்யோ ஜாதாதி பஞ்ச முகங்களினால் பிறந்த, நந்தை, பத்ரை, முதலான பஞ்சகோவு (பசுக்)களின் உபாதியினால் வொவ்வொரு மஹத்வத்தை உட்கொண்டு விபூதி, பசிதம், பஸ்மம், முதலான பஞ்ச நாமங்களையடைந்தது, ஆனால் சத்யோஜாத முகத்தினால், விபூதியும், வாமதேவ முகத்தினால் பசிதமும், அகோர முகத்தினால் பஸ்மமும், தத்புருஷ முகத்தினால், க்ஷாரமும், ஈசான முகத்தினால் ரக்ஷையும், உற்பன்னமாயிற்று, காரணத்திலுள்ள குணம் காரியத்தில் வருமென்னும் நியமமிருப்பதால் ஈஸ்வரனின் அந்தந்த முகத்திலுள்ள அஷ்டைஸ்வர்யாதிகள் அந்தந்த முகத்திலவதரித்துள்ள விபூதிபசிதாதிகளினாலேயும் உண்டாகிறது. இப்படிகாரணத்திலில்லாமல் காரியபூதங்களான இவ்விபூதியாதிகளினால் அஷ்டைஸ்வர்யாதிதர்மங்கள் என்றைக்கும் கிடைக்கமாட்டாது. இவைபரமேஸ்வரனின் பஞ்சமுகங்களி லுற்பன்னமானதினாலும், தர்மபேதத்தாலும், பஞ்ச நாமங்களையடைந்து சிவபக்தரின் உத்தமாங்காதி ஸ்தானங்களை யாஸ்ரயித்து அப்பக்தரின் ஹிருதயத்தை யாஷ்ரயித்த ஜன்ம ஹேதுவான பவபீஜத்தை (பிறவி வித்தை) ச்சுட்டு சிவதத்துவப் பிரகாசத்தை யுண்டாக்கும், ஆனதாலிப்பஸ்மத்தின் மஹத்வத்தை எவ்வளவு கொண்டாடினாலும் முடியாததாயிருக்கிறது. இப்பஸ்மத்திலிப்படிப்பட்ட அவ்யாஜ மஹத்வ மிருப்பதினாலேயே

பிரஹ்மா விஷ்ணுஸ்ச ருத்ரஸ்ச தேவாஸ்சக்ர புரோகமா :
தாரயந்தி சதாபஸ்ம பாலதேசேது பக்தித :

விஷ்ணு பிரஹ்மேந்திரியாதி சகல தேவர்களுங்கூட பரமபவித்திரமான பஸ்ம திரி புண்ட்ரத்தை யிடைவிடாமல் தரித்து தங்கள் தங்கள் பதவிகளையடைந்தார்களென்று புராணாதிகள் சொல்லுகின்றன, ஆகையால் விபூதியை நித்யகாரியங்களிலும், பசிதத்தை நைமித்தியகாரியங்களிலும், க்ஷாரத்தை யிதர சர்வகாரியங்களிலும், பஸ்மத்தை பிராயச்சித்தகர்மங்களிலும், ரக்ஷையென்னும் பஸ்மத்தை முக்திகார்யங்களிலும் உபயோகிக்கத்தக்கதென்று ஸ்ரீரேணுக பகவத்பாதர் ஸ்பஷ்டமாகப் போதித்திருக்கிறார்.

இப்பஸ்ம ரசனுக்கிரமமா (விபூதிசெய்யும் முறைமையா) வன, கல்பம் அநுகல்பம், உபகல்பம், அகல்பமெனநான்கு விதமாயிருக்கும் அவையாவன, சாஸ்த்ர விதியை மீராமலும் கோமய கிரஹண முதலாக சிவாக்கினியினுல் பஸ்மமாகும் வரையில் மந்திர தந்திர லோபங்களில்லாமல் செய்வதே கல்பமென்றும், ஈதொரு நியமமுமில்லாமல் காட்டில் கிடக்கும் சாணங்களை அக்கினியால் சுட்டதே அநுகல்பமென்றும், இன்னும் கடையில் விற்கும் விபூதியை எடுத்து கோமூத்திரத்தால் பிசைந்து உருண்டைசெய்து, விதிப்பூர்வமாக நெருப்பில் சுட்டது உபகல்பமெனவும், மந்திர தந்திரங்களெதுவும் தெரியாதவர்களால் தயாரிக்கபட்டது அகல்பமெனப்படும். இந்நான்கு விதமான விபூதிகளில் முதலாவதான கல்பவிபூதியையே சங்கிரஹித்து தங்கள் அஷ்டா வர்ணங்களை நிர்வஹிக்கத்தக்கது. இக்கல்ப விபூதிதாரண மில்லாமல் அஷ்டா வர்ணக்கிரியைகள் என்றைக்கும் சம்பூர்ணமாகமாட்டாது. மானவர்கள் ஆசார்ய பகவத்பாதர் சொன்ன வைதீக அஷ்டாவர்ரண கிரியாநிஷ்டனுகவேண்டுமானுல் கல்பவிபூதியை அவஸ்யமாகத்தரிக்க வேண்டியது. ஈதல்லாமல் பஜாரில் விற்கும் விபூதியைக்கொண்டு வந்துஅஷ்டாவரணங்களில் கலந்தால் அந்த அஸ்ரௌதபஸ்மசம் மந்தத்தினுல் மிக்கபாதோதக பிரசாதாத் யஷ்டாவரணகிரியைகள் சஹிதம் அபவித்ரவ (அசுத்த)மாகுமே யல்லாமல் தான் நடத்தும் அஷ்டாவர்ணசாரங்களெல்லாம் சாம்பலில் ஹோமம் செய்ததை போல வியர்த்தங்களாகும். ஆனதால் அஷ்டாவர்ண கிரியா நிஷ்டராக இருக்கவேண்டு மென்கிற ஆசார்ய பக்தர்கள் தங்கள் தங்களாலான வரையில் ஸ்ரீரேணுக பகவத் பாதராலுபதேசித்தபடியாக ஸ்ரௌத பஸ்மத்தைப் பரிக்ரஹித்து தங்கள் அஷ்டாவர்ணங்களை பூர்த்திசெய்து ஸ்ரீ குருகிருபைக்கு பாத்திரர்களாகித் தன்னியராக வேண்டியது.

(இ ஃது, பஞ்சாசார்யபிரபா பத்திரிகை, 17-6-29)

# திரி (மூன்று) விதவீரசைவ ஸ்வரூபம்.

பாரமேஸ்வராகமம்.

திரிவிதம் வீரசைவாக்யம் அதிகாரி விபேதத:

என்னும் ஆகம வாக்கியத்தின்படிக்கு வீரசைவர்களில் சாமான்ய வீரசைவர், விசேஷ வீரசைவர், நிராபார வீரசைவரென மூன்று வகுப்புகளுண்டு, சமீப காலத்தில் லிங்கம் தரித்துக்கொண்டவர்களைசமானியரென்றும், அநாதி காலத்திலிருந்து லிங்காதாரியாக வந்தவர்களை விசேஷர்களாகியும், சன்னியாசிகளை நிராபாரிகளெனவும், சில இடங்களில் சொல்லிக்கொள்ளுகிறார்கள். இது சித்தாந்தத்திற்கு விரோதமாயிருக்கிறது. அவரவர்களனுசரிக்கும் கிரியா ஞானசாரங்களினால் ஒருவனே ஒரு காலத்தில் சாமான்ய வீரசைவனென்றும், அவனே மற்றொரு காலத்தில் விசேஷ வீரசைவனென்றும், அவனே பிறிதொரு காலத்தில் நிராபாரி வீரசைவனெனவும், சொல்லிக் கொள்ளப்படுவான், அதெப்படியெனில் பாடசாலையில் வாசிக்கும் மாணவன் ஞானதிக்யத்தினால் அந்தந்த வகுப்பைச் சேர்ந்தவனெனச் சொல்லிக்கொள்வதைப்போல ஒரு சாதகனான வீரசைவனே சாமான்ய, விசேஷ, நிராபாரியென்னும் மூன்று பெயரையுமடைகிறான். இதனால் சாமான்யனே விசேஷனும், விசேஷனே நிராபாரியுமாகிறான். கிரியா ஞானங்களால் பிரஷ்டனானால் மேலேறிச் சென்ற நிராபாரியுங்கூட அதோ முகத்தை (தாழ்ந்த கதியை) யுமடையலாம், இச்சாமான்ய, விசேஷ, நிராபாரி யென்னும் வாக்கியங்கள் பிறதியொரு லிங்காங்கிக்கும் அவனுடைய ஆத்ம சக்தியை அனுசரித்து வருபவைகளாயிருக்கின்றனவே யல்லாமல் பிறவியினால் லபிக்கத்தக்கவைகளல்ல குருவினால் சிவலிங்கத்தை யடைந்து கிரியாசாரம் தவறாமல் நடந்து குருலிங்கஜங்கம பிரேமியாகியிருந்தும், தெய்வ தோஷத்தினாலாகிலும், புத்தியின் தோஷத்தாலாகிலும், குருவினலனுக்கிரகிக்கப்பட்ட இஷ்ட லிங்கம் நஷ்டமடைந்தால் மறுபடியும், குருவினாக்ஞையின்படிக்கு பிராயச்சித்தத்தினால் பரிசுத்தனாகி முன்போல கிரியாசாரத்தை யநுஷ்டித்திருப்பவனே சாமான்ய வீரசைவனாவான், சிவ தீக்ஷா காலத்தில் குருவினாலுபதேசிக்கப்பட்ட அஷ்டாவரண ஷட்ஸ்தலா சரணைகளை நடத்திக்கொண்டு லிங்கலோப விரதலோபங்களுக் கிடங்கொடாமல், ஆத்மானுக்ம விசாரியாயிருப்பவனே விசேஷ வீரசைவனாவான், கிரியா சித்தியும் ஞானசித்தியுமடைந்து சிரக்சந்தனாகி (மண், பொன் முதலானவை)களில் மஹாவைராக்கிய மடைந்து பஹி (பஹிர்முக) ரஷ்டாவர்ண அந்த (அந்தர்முக) ரஷ்டாவர்ணங்களுடன் கூடி பக்தாதி ஐக்யாந்த ஸ்தலங்களின் சித்தியையடைந்து பிரபஞ்சாபிமானத்தைவிட்டு மனைமடங்களையும் விட்டு கிரி (மலைக்) குகைகளில் வாசம்

செய்துக்கொண்டும். கரஸ்தலத்தில் பிக்ஷையெடுத்துக்கொண்டும் சர்வசங்கபரித்யாகம் செய்தவனே நிராபாரி யெனப்படுவான், இப்படிப்பட்டவனே ஜீவன்முக்த னென்றும், சிவயோகி யென்றும் சொல்லப்படுவான், இப்படிப்பட்ட சித்தபுருடனையே சித்தாந்தகிரந்தங்கள் விசேஷித்துச் சொல்லியிருக்கிறது, இப்படிப்பட்டவனே ஸ்ரீஜகத்குரு ரேணுகாதி பஞ்சாசார்யர்கள் ஸ்தாபித்த வீரசைவதர்ம ரஹஸ்யத்தைத்தெரிந்து அவிரள சிவாநந்தத்தை யநுபவிப்பவ ரானதாலிவன் ஸ்ரீ ஜகத்குரு ஜகதாசார்யர்களின் பூர்ணாநுக்கிரஹத்திற்குப் பாத்திரனாகிறான்,

சுலோஹம்.

தண்ட கௌபீன காஷாய ஜடாபஸ்ம கமண்டலூன்
த்ருத்வாதலா சிரோமுண்டீ பூத்வா வசனவிவர்ஜித :
அஜிநாசன யுக்தஸ்சன் காஷாயாச் சாதகச்சரேத்
கூஷ்மாண்ட கர்ப்பரம் த்ருத்வா பவேச்சைவ திகம்பர :
யத்ருச்ச யாலப்தசைவ பிரசாதாஸ் வாதனேதர :

காயேனமனசா வாசா த்யக்தபூ வித்தகன்யக :
த்யக்த்வாக்ருஹ மடாதீனி மனுஷ்யாதி ஸ்தலானிச
நிவாசஸ்தேன கர்த்தவ்யோ வனேகிரி குஹாதிஷு
நாம்தோளி காம்ச மாரோஹே தஸ்வாரோஹணவர்ஜித:
பாதசாரீச சம்பூய சரேத்பூ வலயேசதா

எனநிராபாரிகளின் லக்ஷணங்களனேகமாக சித்தாந்த கிரந்தங்களில் சொல்லப் பட்டிருக்கிறது, மோக்ஷாபேக்ஷையுள்ள மாணவனானவன் இப்படிப்பட்ட நிராபரஸ்திதியை யடையவேண்டுமென மதஸ்தாபகர்களின் உத்தேசமாயிருக்கிறது, உச்ச சிக்ஷணத்தை யநுக்கிரஹித்த உபாத்தியாயனிடத்தில் மாணவன் எவ்வளவு கிருதக்ஞதையைக் காண்பித்தாலும் அந்த ருணபாரத்தைத்தீர்க்க முடியாததைப்போல இச்சித்த புருஷனான நிராபாரியானவன் இம் மூலாசார்யர்களிடத்தில் சிரருணியா யிருக்கவே வேண்டும், உலகில் துவைதாத்வைத மதாவலம் பிகளான பிரம்மசாரி, கிரகஸ்தன், வானப்பிரஸ்தன், சன்யாசி, ஆரூடன், என்னுமிப்பதவிகளையடைந்தவர்களெல்லோரும் தங்கள் தங்கள் மதாசார்யர்களிடத்தில் அசாதாரண பக்தியைவைத்து கிருதகிருத்தியராயிருப்பதைப்போல வீரசைவ மதாவலம் பிகளான பிரஹ்மசார்யாதி ஆஸ்ரமிகள் தம்மையநுக்கிரகித்த மதஸ்தாபகரான மூலகுருக்களிடத்தில் அநிதரசாதாரண பக்தியைவைத்து கிருதகிருத்தியராகவேண்டும், லிங்காங்கசாமரஸ்ய ரூபமான முக்தியை யடைய இம்மூன்று விதங்களும் மாடி(மெத்தை)மீதேரவைத்துள்ள ஏணியிலுள்ள மூன்று படிகளைப்போலிருக்கும், ஆரோ

ஹன் கிரமமாக ஒவ்வொரு படிகளின் மீதும் ஏறிப்போவதைப் போல சாதகனானவன் மெள்ள மெள்ள சாமான்ய வீரசைவ லக்ஷணங்களெல்லாம் அநுபவத்திற்கு கொண்டுவந்த பிறகு விசேஷ வீரசைவ லக்ஷணங்களை யநுஷ்டித்துப் பிறகு முடிவான நிராபார வீரசைவ பூமியில் பிரவேசித்து " ஏகேனஜன்மனு முக்தி: " என்னும் சிவோக்தியை அன்வர்த்தகமாக்கவேண்டும் இப்படிப்பட்டவனே நிஜமான வீரசைவனாகிறான். மாமிசபிண்ட நிவிர்த்தி பூர்வகமாக மந்திர பிண்டத்வாபாதகமான சிவதீக்ஷா வசரத்தில் ஆசார்யருபதேசித்த இம்மூன்று விதங்களையும் கிரமத்துடனநுஷ்டித்து பரிபக்குவ சித்தனாகி லௌகிகாபிமானத்தை தியாகம் செய்து தக்த படத்தை (சுட்டதுணியை) ப்போல "ஆபாதத:"தேஹதாரியாயிருப்பவனேநிராபாரியெனப்படுவான் இவர்களையே சிவயோகி யென்றும், லிங்காரூட னென்றும், சொல்வதுண்டு, சாமான்ய வீரசைவனுக்குள்ள குரு பக்தியைக் காட்டிலும் விசேஷ வீரசைவனுடைய குரு பக்தி அதிகமாயிருக்கிறது, இவர்களிருவர்களிடத்திலுள்ள குரு பக்தியைவிட நிராபாரிகளுக்குள்ள குரு பக்தியே அதிகமானதாயிருக்கிறது. பஞ்சகலச ஸ்தபானத்வாரா ஸ்ரீ பஞ்சாசார்யர்களின் சாக்ஷியாக குரு உபதேச மென்னும் சூட்மவித்தானது சிஷ்யனுடைய இருதய பூமியில் விதைத்த பிறகு அவ்வுபதேசமான விதையே இம் மூன்றுபடிகளிலும் கிரமமாக முளைத்துப் பயிராகவளர்ந்து பலனாகின்றது, இம்மூன்று வகுப்புகளிலும் எவ்வகுப்பிலானாலும் முந்திய சிவலிங்கதாரணபூர்வகமாக விதைத்த உபதேசமான வித்து வேறுவதில்லை, இவ்விதையை எடுத்துவிட்டு வேறொரு குருவினால் மற்றொரு உபதேச விதையை யடைந்தாலவன் கண்டிப்பாக குருதுரோஹியாகிறான், இப்படியாக எந்த சித்தாந்தத்திலும், சாமான்யனுக்கொரு உபதேசமும், விசேஷனுக்கொரு உபதேசமும் நிராபாரிக்கொரு உபதேசமெனச் சொல்லவில்லை. நிராபாரியானவன் தீக்ஷாவசரத்தி லநுக்கிரகித்த சிவலிங்கத்தை யாவதும் மஹா மந்திரத்தையாவதும், அஷ்டாவர்ண ஷட்ஸ்தலங்களையாவதும் விடவில்லை.

இப்படியிருந்தாலும் சிற்சில விடங்களில் நிராபாரிகளுக்கொருகுருக்களென்றும்,விசேஷர்களுக்கொரு குருக்களென்றும், சாமான்யர்களுக்கொரு குருக்களெனவும், வாதிக்கத்துடங்கியிருக்கிறார்கள், இது வீரசைவ மதஸ்தாபகர்களான பஞ்சாசார்யர்களின் சித்தாந்தத்திற்கு முற்றும் விரோதமாயிருக்கிறது, ஞானிக்யத்தாலாகப்பட்ட நிராபாரியின் அதிகாரமானது கலிகால மஹிமையினால் தகப்பன் ஸ்தானத்தை மகன் அடைவதுபோலவும் வீடுமடங்களைகட்டிக்கொண்டு சேமித்து வைத்திருந்த திரவ்

யங்களெல்லாம் நஷ்டமான அபிமானத்தினால் நிராபாரி யென்னு மங்கித நாமகரணத்தைபடைந்தும் தான்பிராணன்விடுங்காலத்தில் தன்னுடைய ஸ்தானத்திற்கு மற்றொருவனை உட்காரவைக்கிறான், அவனால் மற்றொருவன் வருகிறான், இப்படியாக நிராபாரிகள் தங்கள் மடங்களின் விஷயத்தில் கிரகஸ்தர்களை விட இழிவாக நடத்த வாரம்பித்திருக்கிறார்கள்,

ஆத்ம சக்தியை உயர்த்தியும் தேஹசக்தியைத்தாழ்த்தியும், கேவல லிங்கவிஹாரியானவனே உண்மையான நிராபாரியாகிறான், இப்பெயர் வைராக்ய பலத்தினால் வருவதல்லாமல் பெரிய பெரிய மடங்களைக் கட்டிக்கொள்வதினால் வரத்தக்கவையல்ல இப்படிப் பட்டவுண்மையான நிராபாரிகளுக்கு வாஹனாதிகளின் அபேக்ஷையாவதும் திரவ்யசங்க்ரஹ ஆசையாவதும் ஸ்வாபிமானமாவதும் இவைகளொன்று மிருப்பதில்லை, இவைகளைவிட்டு பலாத்காரத்தினால் நிராபாரிகளெனப் பெயர்களைவைத்துக் கொண்டுள்ள தர்மசாஸ்திர ஞானசூனியரான சில டாம்பீக விரக்தர் மதஸ்தாபகர்களைவிட ஒரு மடங்கும் சிவனைவிடத் தாமே பெரியவரெனப் பிரலாபித்து நவீனநாஸ்திகராகக் காணப்படுகிறார்கள், மற்றும்,

நிராபாரி யென்றும் நாமமானது பரம்பரையாசவாவது அல்லது தந்தைபால் மகனுக்கு நாமகரணம் செய்யப்படும், ஈிவப் பசங்கரப்ப, முதலான சப்தாதிகளைப்போல கேவல அபிமானத்தினால் வந்தவையல்ல இவைபரம்பரையாகவாவது, அபிமானத்தினாலாவது, வருவதாயிருந்தால் யார் வேண்டுமானாலும் நிராபாரிகளெனச்சொல்லிக் கொள்ளலாம், இந்நிராபாரி யென்னும் விபவகாரமானது கேவலம் யோகத்தினாலேயே யடையவேண்டியதேயொழிய பலாத்காரத்தினால் வரப்பட்டவையல்ல,

நிவிருத்தகர்ம பாரத்வான் நிராபார இதிஸ்மிருத :

ஈவர் பிரபஞ்சவிபவகாரங்களெல்லாம் விட்டிருப்பாரோ அவரேநிராபாரியென சித்தாந்த கிரந்தங்களினால் ஸ்பஷ்டமாகிறது, இப்படியாக யோகாந்தத்தை விட்டு சித்தாந்தத்திற்கு விரோதமாகவுள்ள ஒருவன் மிருத்புவசமானால் (சிவைக்கியமடைந்தால்) அவன் ஸ்தானத்திற்கு மற்றொருவனும் அவனுக்குப் பிறகு வேறொருவனாக யிப்படியே நிராபாரிகளெனச் சொல்லிக்கொள்வதானது கேவலம் கேலிக்கிடமாகியும் நாடகமாகியும் பரிணமிப்ப (வேறுபடுவ) தைப்போலவும், மற்றும் தந்தையானவன் குமாரனைப் பாலாக்ஷ னெனக் கூப்பிடுவதைப்போல கேவல அங்கித நாமமாகப் பரிணமிக் (அடையாளப்பெயராகப்படு) கிறது, பின்னும் சித்தாந்தத்தி (தருக்க முடிவி) ன்படியாக ஜாதி சூலாசாரங்

களின் தொடர்ச்சியில்லாத இந்நிராபாரி யென்பவன் சித்தவர்க்கத்தைச்சேர்ந்தவனல்லாமல் சாதக (அப்பியாச) வர்க்கத்தில் சேர்ந்தவனல்லன், எவன் சாதகனோ (அப்பியாசியோ) அவனே ஜாதி குலாசாரங்களில் பக்தனாகிறான், தீக்ஷாகாலத்தில் ஸ்ரீ குருவினாலுபதேசிக்கப்பட்டு உபாசனா சாமர்த்யத்தை யடைந்து பரிபக்குவ சித்தனாகி வைராக்கியத்தை யவலம்பித்து சதீ சுதாதி பிரபஞ்ச வ்யாமோஹத்தை (மனைவி, புத்திரன் முதலானவர்களின் உலகஆசையை)யும் பொன், பெண், மண்ணின், ஆசையை விட்டு கரதலபிக்ஷதருதலவாச' என்னும் சுருதியின்படிக்கு ஆஸ்ரயித்துக்கொண்டும் "நகுர்யாத் வஸ்து சங்கிரஹம்" என்னும் சுருதியைப்போல சம்சாரிகளாஸ்ரயிக்கும் மாதிரியாக தனதான்ய சங்கிரஹம் செய்யாமல் கிராமத்திற்கு ஒரு இரவும் பட்டணத்திற்கு பஞ்சராத்திரியு (ஐந்து இரவு)மாக காலத்தைக் கழித்துக்கொண்டு தேஹ(சரீர)த்தை ஜீர்ணம் செய்துக் கொண்டிருப்பவனே நிஜமான நிராபாரி யெனப்படுவான், இதற்கு மாறாக சம்சாரிகளைப்போல வீடுமடங்களை யபிவிர்த்தி செய்துக் கொண்டும் கனகமகுடாதி யாபரணங்களாலும் வாஹனாரூடனாகி மஹாராஜரைப்போல நகாரி, நௌபத்திக்களுடன் கூடினநித்தியோர்ச்சவம், பக்ஷோர்ச்சவம், மாதோர்ச்சவம், வருடோர்ச்சவம், ரஜதோர்ச்சவம். சுவர்ணோச்சவங்களில் ஆசக்தரானவர்கள், சாபாரிகளாவார்களே யல்லாமல் நிராபாரிக ளென்றைக்கு மாகமாட்டார்கள். பேருக்கு பால், பருகுவ (குடிப்ப)தற்கு மோரில்லை, யென்னும் பழமொழியைப்போல இப்படிப்பட்டவர்கள் நிராபாரிகளெனச் சொல்லிக்கொண்டால்

தேஷா மிந்த்ரிய நிக்ரஹோ யதிபவேத் விம்த்ய :பலவேத் சாக்ரே

என்பதைப்போல இப்படிப்பட்டவர்களுக்கு இந்திரிய நிக்ரஹமாகுமென்றும், இந்திரிய நிக்ரஹமாகாதிருந்தால் ஸ்ரீஜகத்குருரேணுகாதி பூர்வாசார்யர்கள் போதித்த பிரகாரம் அங்கேந்திரியங்களெல்லாம லிங்கேந்திரியங்களாகு மென்றும் சொல்லியிருக்கிறார்கள், இதற்கு மாறுபட்ட நாமதாரிகளான நிராபாரிகளுக்கு ஷட் ஸ்தலசித்தி ரூபமான மோக்ஷமென்பது அப்ரசித்தமேயாகிறது, சம்சார சாகரத்தில் அலைகளைப்போல புறப்பட்டுக்கொண்டிருக்கும் சுகதுக்கங்களின் மோதுதலை எவன்தப்பித்து(நீக்கி)க்கொள்வ தில்லையோ அப்படிப்பட்டவன் நிராபாரி யென்னும் சப்தத்திற்கு வெகுதூரமாயுள்ளவனேயொழியசமீபித்தவனல்ல,

ஜனனமரணாத்மகமான கோர சம்சார மென்னும் விஷக்கடலில்மூழ்கி பஹிரிந்திரிய (வெளிஇந்திரிய) ங்களிலெல்லாம் விஷம் வியாபித்து (பரவி) அந்தரிந்திரிய (உள்ளிந்திரிய)த்துள்ளும் பிரவேசித்து (நுழைந்து) மூர்ச்சிதனாகி விஷஜ்வாலையினால் வெந்துதக்கையாகி அலைந்துக்கொண்டிருக்கும் இந்த ஹீனமானமானவ

(மானிட) தேஹத்தை ஆசார்யபகவத்பாதர் சிவதீக்ஷா லிங்கதாரணை தேசங்களினால் பரிசுத்தம்செய்து அவரவர்களின் மந்த, தீவிர, தீவிரதர, சக்திபாதகங்களை திவ்யதிருஷ்டியினாலறிந்து சாமான்ய, விசேஷ, அல்லது நிராபாரிகளின், தர்ம ரஹஸ்யத்தைப் போதித்து ஆசிர்வதிக்கிறார்கள், சிஷ்யன் மந்தாதிகாரியாயிருந்தால் சாமான்ய வீரசைவ னெனப்படுகிறான், தீவிராதிகாரியாயிருந்தால் விசேஷ வீரசைவ னெனப்படுகிறான். தீவிரதர அதிகாரியாயிருந்தால் நிராபாரி யெனப்படுகிறான், வீரசைவ மதத்தில் ஜனனமெடுத்தவ ரெல்லாம் நிராபாரிகளாகமாட்டார்கள்.

சர்வ சம்சார சவுக்யானி த்யக்வாசித்தம் சிவேபவேத்

இப்படிப்பட்ட வாக்கியங்களால் நிராபாரியான மஹாநுபாவன் சிவரூபியாகிறான், முமுக்ஷுவான பிறதியொரு லிங்காங்கியும் ஆரூடஸ்தானத்தைப்போல பவித்ரமாகியுள்ள நிராபாரிஸ்தலத்தையடைய அருகனாயிருந்தாலும் இப்பொழுதுலவ்வொரு ஜாதியைப்போல நிராபாரிகளின் ஜாதியொன்று வேறாக மாறுபாடாயிருக்கிறதைப் பார்க்கில் கேலிக்கிடமாயிருக்கிறது, ஒரு நிராபாரியானவன் தன்ஸ்தூலசரீரத்தை விட்டால் அந்த ஸ்தானத்திற்கு ஒன்று மறியாத சிறுவனைக் கொண்டுவந்து உட்காரவைத்து அவனை நிராபாரியெனக்கூப்பிடும் சம்பிரதாயத்தை வைத்திருக்கிறார்கள், அபக்குவ மதியான (பக்குவமில்லாத அறிவுடைய) அச்சிறுவன். நான் நிராபாரியென்னும் அஹம்பாவத்தினால்-நான் நிரீனஸ்தலத்தவன், சூன்யஸ்தலத்தவன் என்று சொல்லிக்கொண்டும் அஷ்டாவர்ண ஷட்ஸ்தலங்களைப் பூலோகத்தில் ஸ்தாபித்து எல்லாரையும் உத்தாரகம்செய்த ஜகதாசார்யர்களைவிடத் தான் உயர்ந்தவனென்று சொல்லிக்கொள்கிறான். இப்படிப்பட்ட உண்மையான நிராபாரியுங் கூடத்தான் நிராபாரியாவதற்கு அருகதையான சிவதீக்ஷையைச் செய்தவர்யார், இம்மதத்திற்கு மூலாசார்யர் யார், சிவலிங்கத்தை, யநுக்கிரகித்தவர் யார், இவர்களின் அநுக்கிரகத்தினாலல்லவா இத்தெசை யெனக்குண்டாயிற்றென்று பிறதிக்ஷிணமும் அந்த ஜகதாசார்யர்களின் நாமஸ்மரணம் செய்யவேண்டியிருக்கிறது, மதஸ்தாபனாசார்யர்கள் சாமான்ய விசேஷ, நிராபாரிகளுக் கெல்லாம் முக்கியஸ்தர்களாயிருக்கிறார்கள்,

(22-12-30, மற்றும் 5-1-31, பஞ்சாசார்ய பிரபா பத்திரிகை.)

---

ஸ்ரீ மதாசார் யேப்யோ நம:

# குரு வர்க்கத்தின், கர்த்தவ்யம்.

உத்தமரான உபாத்தியாயர் பாலகர்களை வித்தியார்த்திகளாகவும், குணதிகர்களாகவும் செய்வதில் எப்படி முக்கிய காரணரோ, அப்படியே மததர்மாதி காரியத்தை வகித்த குருக்கள்

தங்கள் மதத்தின் ஜனங்களை சமஸ்கார சம்பன்னராகியும் அதிசய பக்தி யுதர்களாகவும், ஸ்வதர்மா சக்தர்களாகவும், ஞானிகளாகவும் செய்வதில் முக்கியக் காரணர்களா யிருக்கிறார்கள். உத்தமமான தோணியை அடைந்த மனிதர்கள் எப்படிச்சுகமாக நதியைக் கடப்பரோ அப்படியே சத்குருக்களை யனுசரித்த சிஷ்யர்கள் சம்சாரசாகரத்தைக் கடப்பார்கள். குருக்களிடத்தில் அச்சக்தியானது தனகனகாதி (பொன் முதலான) வஸ்துக்களினாலும், சௌந்தர்ய வேஷாதிகளினாலும், கபடங்களினாலும், வாக்காடம்பரத்தினாலும், உண்டாவதில்லை. குணங்களினாலும், வித்தை (கல்வி) களினாலும், தர்மசித்தாந்த கிரந்தாப்பியாசத்தினாலும், தர்மாநுஷ்டானத்தினாலும், தத்துவ ஞானநுபவத்தினாலும், உண்டாகின்றது. எவரிடத்தி லிச்சக்தி யிருப்பதில்லையோ அவர் பெயருக்கு குருக்களென்னப்பட்டு மூர்க்க ஜனங்களைக்கபடோக்திகளினால் சுவாதீனர்களாகச் செய்துகொண்டு அவர்களினால் திரவ்யம் சேகரித்ததைத் தங்கள் போகத்திற்கும், தங்கள் பந்துக்களைப் பேஷிப்பதற்கும், விநியோகிப்பார்கள். உத்தமரான பிரபுக்கள் பிரஜைகளிடத்தில் நியாயாநுசாரமாக திரவ்யத்தைச் சேகரித்து அதை அப்பிரஜைகளின் சுகத்துக் காகவே எப்படி யுபயோகிப்பாரோ அப்படியே அச்சக்தியை அடைந்த குருக்கள் சிஷ்யர்களினால் நியாயாநுசாரமாக திரவியத்தைச் சம்பாதித்து அதை யவர்களின் தர்மம், வித்தை (கல்வி) முதலானவைகளின் விர்த்திக்காக உபயோகிப்பார்கள். ஆனால் குலசீலாதிகளினால் உத்தமர்களான ஜனங்களில் யாராவது கபட குருக்களின் சம்மந்தத்தை யடைந்தாலவர்.

"சம்சர்க்கஜா தோஷ குணா பவந்தி"

என்னும் நியாயமிருப்பதால் தர்ம ரஹிதரும் அஞ்ஞானிகளுமாவார்கள், அவர்கள் இஹலோகத்தில் நிந்திதராகி பரலோகத்திலும் சத்கதி (நல்ல பதவி)யை யடைவதில்லை.

வீரசைவமானது சிவோக்தமானதினால் சிவமத மென்றும், சிவபக்தர்களினாலே ஆஸ்ரயிக்கப்படுவதற்கு யோக்கிய மாயிருப்பதால் சிவபக்தமத மென்றும், பிரசித்தமாகிச் சிவபஞ்சமுகோத்பூதர்களான ஸ்ரீஜகத்குருபஞ்சாசாரியர்களினாலேஸ்தாபிக்கப்பட்டு மோக்ஷதாயகமாயிருக்கிறது, இதையாஸ்ரயித்த ஜனங்களுக்கு சம்ஸ்காரங்களைக் கொடுப்பதினாலும் சிவதர்மங்களான, குரு லிங்க, ஜங்கம, பஸ்ம, ருத்ராக்ஷ, மந்திர, பாதோதக, பிரசாதங்களென்னும் அஷ்டாவர்ண கிரியைகளையும், லிங்காசாரம், சதாசாரம் சிவாசாரம், பிருத்யாசாரம், கணாசாரங்களென்னும் பஞ்சாசாரங்களையும், ஷட்ஸ்தல லிங்காங்க சமரசாத்மகமான சிவஞ்ஞானத்தையுமுபதேசிப்பதில் சத்குருக்களே சக்தரா யிருக்கிறார்கள், அச்சத்குருக்களிடத்தில், வேதவேதாங்காதி வித்யா வைதுஷ்யம் சிவாத்வைத சித்தாந்த பாண்டித்யம், சதுஷ்சக்தி, தந்திரம், பிர

யோகநைபுண்யம், சத்யவாதித்யம், லோபமோஹ ராஹித்யம், பிராந்திராஹித்யம், நிச்சயபுத்தி, சிவதர்மநிஷ்டை, குருபரம்பராகத சாஸ்த்ரீயாசாரசம்பத்து, சிவதியானசக்தி, பஸ்ம திரிபுண்ட்ர ருத்ராக்ஷ தாரசணக்தி, பாஹ்யாந்தர் லிங்கதாரண சம்பத்து, பாஹியாந்தர் லிங்கோபாசனை, ஏகோத்தர சதஸ்தலக் ஞானம், லிங்காங்கசம்மந்த விசாரம், முதலான லக்ஷணங்களிருக்கவேண்டும்,

புராதனகாலத்தில் இப்படிப்பட்ட சத்குருக்களே இம்மதஸ்தரின் மடாதிகாரங்களை வஹித்திருந்தார்களானதினாலக்காலத்திலிருந்த இம்மதஸ்தரிடத்தில், சிவபக்தி, சிவதர்மம், சிவஞ்ஞானங்கள், உன்னததிசை யடைந்திருந்ததெனச்சொல்லலாம், ஆனதினாலக்காலத்திலிம் மதஸ்தரிற் சிலர் மஹாத்மராயும், சிலர் கிரந்தகர்த்தாக்களாயு மிருந்தார்கள், இன்னுமக்குருக்களுக்கு ஸ்வமத, பரமதஸ்தர்களான வனேகராஜாக்களும் பக்தர்களாகி அவர்களின் மடங்களுக்கு விருத்தி, மான்யமுதலானவநுகூலங்களைச்செய்துக் கொடுத்திருக்கிறார்கள், சுவற்பகாலமாக இம்மதத்திலப்படிப் பட்டசத்குருக்களின் சங்கியை குறைவடைந்தபடியாலிம்மதஸ்தருக்கு பிறமதஸ்தர்களினால் சில தொந்தரவுகளுண்டாய்க்கொண்டுவந்தது மற்று மிம்மதத்தின் ஜனங்களிற் சிலர் மூடர்களும், அசம்ஸ்காரர்களுமாகிஸ்வதர்மங்களின் சுரூபங்களையறியாதவர்களாகியும்தங்கள் கோத்திரம், சூத்திரம், பிரவரம், சாகைகளையும், ஸ்ரீஜகத்குரு பஞ்சாசார்யரின் மஹத்துவங்களையும், தெரியாதவர்களானார்கள், இப்படிப்பட்டவர்களிடத்திற் சில கபடகுருக்களானவர்கள் தங்களின் கபடவேதாந்தோபதேசத்தினாலவர்களைச்சுவாதீனர்களாகச்செய்துக் கொண்டு அவர்களுக்கு வேதவேதாங்காதி வித்தைகளிலும், ஸ்வதர்மங்களிலும் அலட்சியபுத்தியை யுண்டாக்கி மாசாரங்களையே போதித்து ஸ்வார்த்தபரராகி தர்மகாதகராயிருக்கிறார்கள், ஆனாலுமிப்பொழுது இம்மதத்திற் சிலர் சத்குருவிக்கருந்து தங்கள் கர்த்தவ்யத்தை நிறைவேற்றிக்கொண்டிருப்பதாலேயே இம்மதத்தின் ஜனங்களெல்லோரும் கபடகுருக்களின் வசமாகவில்லையானாலும், சத்குருக்களின் சங்க் (எண்ணிக்கை) யைவிட கபடகுருக்களின் சங்கியை விசேஷமாயிருப்பதினால் தர்மசுத ரக்ஷணை நிர்விக்கினமாக நிறைவேறுவதில்லை, ஆனதினால் மாஹேஸ்வரர்கள் தங்கள் வடுக்(புத்திரர்)களை வேதவேதாங்காதி வித்யாசம்பன்னர்களாகியும், வீரசைவ தர்மசித்தாந்த கிரந்தங்களில் பண்டிதர்களாகியும், செய்யவேண்டியதற்கான பிரயத்தினங்களை விசேஷமாக ஆரம்பித்தாலின்னும் சுவற்பகாலத்திலேயே இம்மதத்தில் சத்குருக்களின் சங்க்யை யதிகரித்து இம்மதஸ்தர்களிடத்தில் தர்மாபிவிருத்தியுண்டாவதில் எவ்விதசந்தேஹமுமில்லை,

ஸ்ரீ மதாசார்ய சரணேப்யோ நம:

30-9-29-பிரபா பத்திரிகையின் மொழிபெயர்ப்பு.

அநிர்த ஜடதுக்க மென்பதை விசர்ஜ்ஜனம் செய்து சுசப்த தரங்க மிருது வாக்யம் நிரந்தர புண்யதேஹ வாக்யங்கேள், பிரணவ பஞ் சாக்ஷரியினுல் (1)-வது வாஜதண்டனே, துர்விசனம் விட்டு திடமாக நிலைகொண்டு ஸ்படிகவர்ண பூர்ணமான ஓங்கார மனதுக்கு அக்ஷய மில்லாமல் லக்ஷியம் வைத்தால் (2)-வது மனதண்டனே, அஷ்ட தளகமலத்துள்ளிருந்த நவப்பிரஹ்ம புரத்திர்க்குள் வேறே,வேறே விதி வீதிகளின் அஷ்டதிக் கரிகளைச்சுட்டு சம்சார சாகரத்துக் கண் டகங்களை நிருத்தினுல் (3)-வது காலதண்டனே, ஆசாரமே குலம், ஆசாரத்தைவிட்டு அதிகமில்லை, ஆசார அநுபவ பக்தி நிலைகொண் டால் (4)-வது கர்ம தண்டனையாம், இன்னும்

நேத்திரத்தின் சஞ்சாரத்தினுல் தசவாய்வுகளென்னும் பிண் டத்தில் சுழலும் சுசும்னவென்னும் சுழிமுனையில் காற்று நிற்கும், காற்று நின்ருல் சஞ்சரிக்கும் மனம் நிற்கும், மனம் நின்ருல் எறியும் பொம்மைக்குமேலே (22) மனமென்னும், அரக்கு கம்பங்கள் அல்லது தூண்கள் உருகும், ஸ்தூலதனு, சூக்ஷ்மதனு, காரணதனு வென்னும் தநுத்திரயங்களின் வெளிப்புரத்திற்குள் மாயாமோஹ மென்னும் சங்கிலியினுல் மனம், பவனம், பிந்துக்களென்னும் சர்ப் பத்தைக் கட்டியிருக்க, (52) மணியின் அக்ஷரத்து ஆரத்தைக்கட் டியிருக்கும் குணஜீவனத்தை மனதில் அடக்கி, தியாகுக்கினியி னுல் தஹித்து. ஜபசாரத்தையறிந்து, திரிபுரத்தைச் சுட்டு, கர்ப்பூ ரத்தையுண்ட ஜோதிபோலவும், திவ்யயோகிக்கு கிரியநிக்ரியமென் பதேது, பாவசுத்தாத்மன், அப்படி நிலைகொண்டிருக்கும், தன் நிஜ குணத்தைத்தான் (புஷ்பம் தன் பரிமளத்தைத்தான்) அறியாதவா றுபோலும், வெல்லமானது தன்ருசி தானறியாதவாறு போலும், பாலுக்குள் நெய்போலவும், எள்ளுக்குள் எண்ணைபோலவும், கல் லுக்குள் நெருப்புப் போலவும், கல்லிற்குள் ஜலம் போலவும், கல ந்து வேறில்லாத திவ்ய சிவயோகம், இப்படிப்பட்ட சிவயோக வீர சைவாசாரமுள்ள யிந்த பஞ்சமுத்திரை பரிபூர்ணமான பூருத்ர ஜங்கமனே பிரஹ்மணன்.

## நாஸ்தி பஞ்சேந்திரிய நிக்ரஹம்.

ஸ்வயபத்னி உபஸ்த்யஸ்ய,, பிரஹ்மக்ஷேத்ர சலக்ஷணம்
பிந்து பிரஹ்மம் தத்புருஷம், அன்யக்ஷேத்ரே அகம்தகா (74)
சுருணு நந்தி பிரவக்ஷாமி.

தன் பத்தினியோனியது பிரஹ்மக்ஷேத்திரம், தன் பிந்து என் பதே சிவபீஜம், இச்சிவபீஜத்தை தன் ஸ்திரீயோனி யென்னும் பிரஹ்ம க்ஷேத்திரத்தில் விதைக்கவேண்டும், பரஸ்திரீயோனி யெ ன்னும், அன்னிய க்ஷேத்திரத்தில் சிவபீஜத்தை விதைக்கலாகாது, தன் சிவபீஜத்தை ஸ்நேஹேந்திரிய சதாசாரமாகிப் பசுகரந்து நாய்

வாய்க்கு ஊற்றினமாதிரி, பரமாம்ருதமான வஸ்துவின் பிந்துவை அன்னிய யோனியில் விதைப்பவன் மிருத்யுவுக்குள்ளாகி கபால மோக்ஷமான விப்ரருக்கு ரௌரவ நரகம் தப்பாது, அப்படி நடப்பவன் பிராஹ்மணனல்ல, கர்மசண்டாளன், இன்னும் வீரமாஹேஸ்வர ராசார சங்கிரஹ மனங்கொண்ட பசுவேஸ்வரன், சென்னபசுவேஸ்வரன், வீரேஸ்வரன், சித்தராமன், அசங்க்யாத பிரதமகணங்களே பண்டித பிராஹ்மணர்களென்று சிவன் நந்தீஸ்வரனுக்குச் சொல்லியிருக்கிறார், இன்னுமிவர்களின் மூல கோத்திரோத்பவர்களான

## (7) ரிஷிகள் வம்சம் சுலோஹம்.

ரசஸ்ச விஷமேகைகம் ஹிரண்யரேது வாயுபி:
 ஜோதிவௌசர்வபீஜானும் அக்னிஹோத்ரேன விப்ரஜ: (67)
ஏகேந்திரிய சமம் தாது சமம்பிண்டம் சமுத்பவம்
 ஆத்மஜீவ சமம்தேஹம் வர்ணானும் கிம்பிரயோஜனம் (68)
வசிஷ்ட கணிகாஜாதர் சர்மகாரேண கௌசிக:
 ரோமகா சன கௌண்டல்யம் காரதோ சூஸ்த்ர ஜஸ்ததா (69)
ஸ்வஷ்ட்ரகம் ரோமஜச்சைவ கலாதோ கௌதமஸ்த்ததா
 மாண்டவ்ய ஸ்வபசச்சைவ ஜாதிபேதம் நகாரயேத் (70)
வால்மீகம் பில்மைப்னேதி வேமெதௌவியாச ஸ்ததைவச:
 பூபாரேண மனுத்பத்யம் கஸ்யபோ முனிபுங்கமம் (71)
அதமம் அஜமேளானும் மாதங்க முனி ருச்யதே
 அகுலேபி முனிர்ஜ்ஜாதம் கானுகோத்ர பிரகீர்த்தித: (72)
வேதசாஸ்த்ர பரோபூத்வா வேதவாக்ய விவர்ஜ்ஜயேத்
 ஸ்ருதிபிரஷ்ட மதிப்ரஷ்ட அசத்யம் விப்ர ஜன்மனீ (73)

கேளும் நந்தீஸ்வரா பூமியெல்லாம் ஒன்றே, விப்ரருக்கு ஒரு ஜலமும் மற்ற ஜாதியார்களுக்கும் ஒரேஜலமே, விப்ரருக்கு ஒருஅக்கினியும், மற்றஜாதியார்களுக்கும் ஒரே அக்னியே, விப்பிரருக்கு ஒரு வாய்வும், மற்றவர்களுக்கும் ஒரே வாயுவே, விப்ரருக்கு ஒரு ஆகாயமும், மற்றவர்களுக்கும் அதே ஆகாயமே, எல்லா ஜாதியார்களுக்கும், ஒன்றேசரி "சமம்தாது சமம்பிண்டம்" என்பது போல விப்ரருக்கும் தாது ஒன்றே, மற்றவர்களுக்கும் தாது ஒன்றே, விப்ரருக்கும் ஒரு பிண்டமே மற்றவர்களுக்கும் ஒரே பிண்டமே, விப்ரருக்கு ஒரு சனனமும் மற்றவர்க்கும் ஒரு ஜனனமே, விப்ரருக்கு ஒரு ஆத்மா மற்றவர்க்கும் ஒரே ஆத்மாவே, விப்ரருக்கு, ஒரே ஜீவனே, மற்றவர்க்கும் ஒரே ஜீவனே, விப்ரருக்கு ஒரு தேசமும், மற்றவர்க்கும் அதே தேசமே, விப்ரருக்கு ஒரு தேஹமும் மற்றவர்க்கும் ஒரு தேஹமே, எல்லா ஜாதியார்களுக்கும் ஒன்றே சரி, ஒன்றே

யாகயால் "வர்ணனும் கிம்பிரயோஜனம்" என்றது, தன் நிமித்தம் பிராம்மணன்தெரிந்ததென்ன, மற்ற ஜாதியார்கள் தெரியாததென்ன, ஆகையால் எல்லாஜாதியும் ஓரே வர்னம், சும்மாவதும் ஜாதிவர்க்கம் கனமென்றுச் சொல்லுவார்கள், அப்படியல்ல, சிவாசார அங்கமுள்ளவனே பிராஹ்மணன், சிவாசாரத்தை விட்டு கோசாரத்தில் நடக்கும் ஜாதிகளெல்லாம், ஸ்வபசர், அதமஜாதி யென்பதற்கு விபரம் யெப்படியென்றால்,

(1) வசிஷ்டமுனி, ஊர்வசி தாசியின் புத்திரன், சிவாசாரபிரஹ்மோபதேசமே அங்கமான காரணம், பிரம்மருஷியானார்,

(2) விஸ்வாமித்திரமுனி,மச்சிகனல்லவா,சிவாசாரபிரஹ்மத்தையாஸ்ரயித்த காரணம் ராஜருஷியானார்.

(3) கௌண்டல்ய முனி, நாவிதனல்லவா, சிவாசார பிரஹ்மத்தை யாஸ்ரயித்த காரணம் மநுப்பிரம்மாவானார்.

(4) நாரதமுனி தாசியின் மகன், சிவபக்தி ஆசாரபிரேமியானகாரணம் சிவபிராஹ்மண ஸ்ரோத்திரியருக்கு ஆசாரியரானார்.

(5) கௌதமமுனி, அக்கசாலயனல்லவா, சிவஞ்ஞான சம்பன்னதை காரணமாகி மஹாபிரஹ்மசபைக்கு முக்கியரானார்

(6) ரோமஜமுனி,கன்னனல்லவா, சிவாசாரசிவக்ஞானபிரஹ்மம் நிலைத்த காரணம் பிரளயத்திற்கு ஒருரோமமுதிர்ந்து பிரளயபண்டிதரானார்.

(7) மாண்டவ்ய முனி, சக்கிலியனல்லவா, சிவாசார சம்பன்னனகாரணம் விப்ரகுலத்திற்கெல்லாம் அரசுவிப்பரானார்

(8) மார்க்கண்டேயர், தவளை வயிற்றிற்பிறந்தும்,சிவயோகியானதிநிமித்தம் எல்லா கோத்திரத்திற்கும் சிரேஷ்ட பிராஹ்மணரானார்.

(9) பாரத்வாஜர், கம்மாளச்சியின் மகனல்லவா,சிவபக்திப்பாராயணனான காரணம் பிராஹ்மண குருவானார்.

(10) வால்மீகர், வேடனல்லவா, சிவசம்ஸ்காரியான காரணம் விப்ர குலத்திற்கு ராஜ ஹம்சமானார்.

(11) வேதவியாசர், செம்படச்சியின் மகனல்லவா, சிவபக்திக்குப்பத்திரகஜமான காரணம் பிரஹ்ம குலத்திற்கு ஜோதியானார்.

(12) கஸ்யபமுனி, கம்மாளனல்லவா, சிவபக்தி உத்தாரகனானதிநிமித்தம் சிவபதத்துக்குச் சதுர்முகப் பிரஹ்மாவாகி உலகத்தையுண்டாக்கினார்

(13) அஜமிளருஷி, பறயனல்லவா, ஆத்துமத்தில் சிவனைபஜித்ததிநிமித்தம் சிவ பிராஹ்மணனானார்.

இப்படியாக அஷ்டவிம்சத் சஹஸ்ர பிரஹ்ம ருஷிகள் சிவனைப் பூசித்துத்திவ்ய பிரம்ம ருஷிகளானார்கள், மண்ணை நெற்றிக்குஇட்டு விட்ட அந்தியஜ விப்பிரர்கள் வேதசாஸ்த்திரத்துள் "ஏக யேவ நத்விதீய" என்பதாகச் சிவனல்லாது அன்னியதெய்வமில்லை என்பதற்குவமார்கள், தெரிந்துத்தெரிந்து ஹரனே தெய்வம் ஹரியே பிருத்யனென்னும் வேதவாக்கியத்தை விசர்ஜ்ஜித்து தன் வயிற்றின் கர்ம இஷ்டனான விப்ரன் சிவன் விஷ்ணுவின் பேரனென்றுச் சொல்லும் அந்தியஜ விப்ரர்கள் ஸ்ருதி பிரஷ்டர், மதிபிரஷ்டர், அசத்தியர்கள்,

## குறிப்பு

இன்னுமிவ் விப்பிரர்களைப்பற்றி விரிவாயறிய வேண்டில் சித்தூர்ஜில்லா அதாலத்து கோர்டுதீர்ப்பு புஸ்தகத்திலிவர்கள் ஜெனனங்கள், (40-41-70-71)வது பக்கங்களிலும், வேதவ்வியாசர் வலது கையை மணிகட்டுவரையில் வீரமுஷ்டி துண்டித்த சங்கதி ஷை புஸ்தகம் (35-36-46)-வது பக்கங்களில் விவரமாகத்தெரியவும்.

## (8) சிவநிந்தை சுலோஹம்

சிவபக்தி விஹீனஸ்ய த்விஜானும் வேதபாடக :
பின்னகும்ப யதாதோயம் வதாயாம் நிஷ்பலம்பவேத் (75)

சிவநிந்ய க்ருதம் பாபம் பிரஹ்ம மர்த்ய ஜனம்நர:
அஜ கல்ப சஹஸ்த்ரேப்யோ நரகேகாலமக்ஷயம் (76)

பிராஹ்மணன் முதல் அந்த்யஜாதி கடைசிவரையில்(18)குலத்திற்கும் சிவனேதெய்வமென்பது மனதில்தெரிந்தும், சிவநிந்தை செய்தாலவர் நாய்வயிற்றில் (100) தடவைபிறந்து புலையர் வீட்டு வாசல் காப்பார்கள்.

## சுலோஹம்

அகோத்ர கோத்ர மித்யாஹம் சிவநிந்ய க்ருதம் நிருணு
ஸ்வானயோனி சதங்கத்வ சண்டலாக்ருஹமாசரேத் (77)

வேதப்ரோக்த வசம்தத்யம் ப்ரணவோ ஜங்கமஸ்ததா
பர்க்கோ தேவவ்ரஜம் நியாயாம் சர்வதேவோநிரஞ்ஜன (78)

வேதப் பிரமாணமாக பிரணவமே ஜங்கமரூபம், அச்சங்கமமே சிவனென்று மனதில் தெரிந்தும் நம்பாமலும் இன்னும் திரிகுணாதி சர்வவிஷயங்களுக்கு பிராந்தி கொண்டதாமச ஜனங்கள் நித்யக்ருத ஜங்கமனை நிந்தை செய்யும் அஞ்ஞானி பாபிகளுக்கு ஆயிரம் பிரம்ம கல்பம் வரையில் அவருக்கு நாயக நரகப்பிராப்தி காணும் நந்திஸ்வரா. மற்றும் ஆதி ருத்ரன் கிகையில் பஞ்சசைவங்கள்

பிறந்தன, அவைகளின் நாமங்களாவன, சிவஸ்ரோத்தியர், பாசுபதி, காபாலி, காளாமுகி, சாகசைவயம்,ஆக ஐந்து,இவைகளில்நவகுலம் மிஸ்ர மாயிற்று, அவையாவன தபோதன, ஜிய்ய, குருதேவ, ருத்ர வாத்ய, தம்மடி, சோமசம்பு,அமிருததேவேய, சக்ஷஸ்ருதக, பூருக, ஆக 14-குலத்து சைவருக்கும், பஞ்சமடபூஜை, இவர்கள் ருத்திர பிண்டம், ஈஸ்வரன் கோத்திரம், சிவகாயத்ரீ, சிவமந்திரம், பிரணவ லிங்கம்,சுத்தசைவம், ஹிமோத் கேதாராத்தின் மஹேசாவதாரத்து பரமேஸ்வரலிங்கம்

## (9) பஞ்ச யுக பஞ்ச மடங்கள்.

அலங்க்ருதே ரத்ன மஸ்ய க்ருதே சுவர்ன மௌல்யனி
த்ரேதாயாம் யஜுகாயத்ரீ த்வாபரேத் வஷ்டமேவச:
கல்யாயாம் க்ராவஜச் சைவ பஞ்சைதே மடமுச்யதே. (79)

(1)-வது பிரதம யுகமென்னும், அலங்கிருத யுகத்தில், நவ ரத்னசிவாலயம், ரத்தின (101) ஆசனம்,மாணிக்யஜோதிர் லிங்கம், இதற்கு ஹரிதவர்ணம், விபூதி, ருத்ரகண சிம்மாசனம், ரத்தின சஜ்ஜை, சிவதாரம், அநுமிஷாசார்ய குருகலசம், அமரேஸ்வர மல் லிகார்ஜ்ஜுன தேவர் குருகாருண்ய பிக்ஷா, ஹிமோத்கேதாரம், மஹேசாவதாரத்து பரமேஸ்வர லிங்கம், கோமுக காயத்ரீய ஹரி ஜலமுகம், பிரதமமடம், நிஷ்ப்ருஹ ஜங்கமன்,

(2)-வது கிரேதா யுகத்தில் ஹேம சிவாலயம், ஹேம லிங்கம், சுவர்ண (216) ஆசனம், ஹேமத்தின் (500) கடிகஸ்தானம்,(1500) மகரதோரணம், ஹொங்கலசம், இதற்கு பீதவர்ணத்து பஸ்மம், பிரதமகண சிம்மாசனம், சுவர்ணசஜ்ஜை, சிவதாரம்,ரேணுகாசார்ய ரேவண சித்தைய்யதேவர், கிழக்குத் திசை, அக்கினித் திக்கு,தாம் பிர கலசம், சாந்தமல்லிகார்ஜ்ஜுன தேவன் சித்த தயாதர்மபிக்ஷா, காசிபதி விஸ்வநாத தேவர், கபிலவர்ணம், ஹிரண்யமயம் த்விதீய (இரண்டாவது) மடம், விரக்தஜங்கமன்,

(3)-வது திரேதாயுகத்தில் வெள்ளிசிவாலயம், வெள்ளி லிங் கம், (441) கடிகஸ்தானம், வெள்ளிய ஜாலீந்திரத்து மௌத்திக ரத்தின கலசம், (1000) இதற்கு கிருஷ்ண தவளம் கூடின பஸ் மம், அமரகண சிம்மாசனம், வெள்ளி சஜ்ஜை, சிவதாரம், தாரு காசார்யர், மருள சித்தைய்ய தேவர், தெற்குத் திக்கு, வெள்ளிக் கலசம், கபிலசித்த மல்லிகார்ஜுன தேவர் சிவதயா தர்மபிக்ஷா, சேது பந்த ராமேஸ்வரதேவன், சஞ்சுவர்ணத்துகாயத்ரீய மூலாக் ருதியின் மடம், (3) விதமான தேசிகோத்தம அதீத ஜங்கமன்.

(4)-வது துவாபர யுகத்தில், தாம்பிர சிவாலயம், தத்வ சிந் தாமணிய கலாதளிர்க்கும் திவ்ய ஜோதிர் மயமான தாம்பிர லிங் கம்,கிராணசிம்மாசனம், தாம்பிர சஜ்ஜை,சிவதாரம், சங்கு கர்ண

சார்ய ஏகோராமையய தேவன், மேற்குத் திக்கு, ரத்ன கலசம், போக மல்லிகார்ஜ்ஜுனதேவ தயாதர்ம குருகாருண்ய பிக்ஷா, ஹேம கூடத்து விரூபாக்ஷலிங்கம், ஜம்புநாக பலாக்ருதி சதுர். (நான்காவது) மடம், ஹஞ்சுகந்தெ ஜங்கமன், இன்னும்,

தாளு, போளு, மருளு, மங்கென்றால் (1)-வது தாளென்றால் பண்டிதா ராத்தியர், போளென்றால் ஏகோராமாராத்தியர் மருளென்றால் மருளசித்தேஸ்வரர், மங்கென்றால் ரேவண சித்தேஸ்வரர், இன்னும் (2)-வது, தாளென்றால் குரு, போளென்றால், லிங்கம், மருளென்றால், ஜங்கமம், மங்கென்றால் பக்தன், இன்னும் (3)-வது, தாளென்றால் பிரம்மா, போளென்றால் விஷ்ணு, மருளென்றால் ருத்திரன், மங்கென்றால் ஈஸ்வரன், இப்படியாக நான்குதரத்து ஸ்தலமும் கூடிக்கொண்டிருக்கும், ஹஞ்சுகந்தெ ஜங்கமமாயிற்று.

(5)-வது கலியுகத்தில், கல் சிவாலயம், பரமபாவன மூர்த்தி, சந்திரகாந்தம், சூரியகாந்தம், கபிலசித்ததைவீகத்து சிலையலிங்கம், சிலையசூஸ்த்ரத்து சஜ்ஜை, சிவதாரம், கோகர்ணசார்ய, பண்டிதாராத்யதேவர் வடக்குதிக்கு, சுவர்ணகலசம், சன்ன மல்லிகார்ஜ்ஜுனதேவர், சித்ததயாதர்மபிக்ஷா, ஸ்ரீகிரியின் அமிர்த மல்லிகார்ஜ்ஜுனதேவர், ருத்ராக்ஷிய போளாக்ருதிய வர்ணம்:- பஞ்சமடம், சரபதியே மடத்திற்குப்பதியான ஜங்கமன்.

## (10) ஜங்கம லக்ஷணம் சுலோஹம்.

மாதா கௌரி பிதாருத்ர ஈஸ்வர: குலமேவச:
பாந்தவோசிவபக்தாஞ்ம், ஸ்வதேசம்புவனத்திரயம் (79B)
த்ருணம் பிரஹ்மத்ருணம் விஷ்ணுத்ருணம்ருத்ராதிதேவத:
த்ருணம் விஸ்வாதிவிஸ்வஸ்ய நிஷ்ப்ரு:ஸ்யத்ருணம்ஜகத் (80)
ஜகாரம் பிரஹ்ம ரூபேண ககாரம் கருடத்வச:
மகாரம் ருத்ரரூபேண த்ரி மூர்த்திச் சைவ ஜங்கமம் (81)
ஜகாரம் ஜனனம் நாஸ்தி ககாரம் கமனவர்ஜ்ஜயேத்
மகாரம் மரணம் நாஸ்த்தி தஸ்ய ஜங்கம லக்ஷணம் (82)
ஜகாரம் ஈசமித்யாஹு ககாரம் சிவ முச்சதே
மகாரம் தத் பரம் தேவாத் ரைதத்வாத்மக ஜங்கமம் (83)
ருக்வேதஸ்ய ஜகாரஞ்ச யஜுர்வேதம் ககாரகம்
மகாரம் சாமவேதம்ச த்ரைவர்ணாத்மக ஜங்கமம் (84)

ஜங்கமமென்னும் திரிவர்ணாத்மகர்களுக்கு மாதாவே கௌரி, பிதாவே ருத்ரன், ஈஸ்வரன் குலத்து சிவபக்தரே பந்துக்கள், சதுர்த்தசபுவனமே மதம், இப்படிப்பட்ட பஞ்சமடபதி ஜங்கம தெய்வம், அதீத மூர்த்திகள், சிரேஷ்டர், இச்சங்கமத்திற்கு

த்ருண சமானம் பிரஹ்மா, த்ருண சமானம், விஷ்ணு த்ருண சமானம் ருத்திரன் த்ருணசமானம், சதுர்த்தசபுவனம், சராசர நிஷ்ப்ர: நிராஸ்ரய விரக்த, நிர்வாண, அதீதியான தேசிகோத்தமஜங்கமஸ்தலத்திற்கு யிவர்கள் துருணஸ்சமானம் என்று பரமேஸ்வரர் சொல்லியிருக்கிறார். இன்னும்

ஜகார மென்றால் பிரஹ்மா, ககாரமெனறால் விஷ்ணு, மகாரமென்றால் ருத்ரன், இப்படி திரிவர்ணம், திரிமூர்த்தி யாத்மகம் ஜங்கமமென்றுச் சொல்லப்பட்டது. இன்னும் ஜகாரமென்றால் திரிலோகம், ககாரமென்றால் சதுர்த்தசபுவனம், மகாரமென்றால் (21) சுவர்க்கம், இப்படி ஜங்கம மென்னும் பிரணவம் என் ஆத்மா புரகுக்ஷி காணும் நந்தீஸ்வரா, இன்னும்,

ஜகாரமே ருக்வேதம், ககாரமே யஜுர்வேதம், மகாரமே சாமவேதம், இப்படிப்பட்ட மூன்றக்ஷரமே மூன்று வேதம், என் சரீரம் காணும். நந்தீஸ்வரா, இன்னும் ஜகாரமே ஈஸ்வரன், ககாரமே, சதாசிவன், மகாரமே பரசிவன், இவை மூன்று தத்துவமும், மமதேவதைகள். இன்னும், ஜகாரமென்னும் பிரணவம் தானுனல் ஜனனம் நாஸ்தி, ககாரமென்னும், பிரணவம் தானுனல் கமனம் நாஸ்தி, மகாரமென்னும் பிரணவம்தானுனல் மரணம் நாஸ்தி நிற்குண, நித்திய, நிர்மல, சம்யோக, பரமபதத்துக்குள்ளிருக்கும் இப்படிப்பட்ட ஈஸ்வரனின் சர்வத்ரயமான வஸ்த்துக்களெல்லாம் ஜங்கமமென்னும் மூன்றக்ஷரத்திற்குள் காணும் நந்தீஸ்வரா இப்படிப்பட்ட ஜங்கமஸ்தல மெல்லாம் ஆதி ருத்திரன் சிரசின் மேலே நிர்மிதமானது. இன்னும் குருதேவனென்றால், பஞ்சசைவங்கள், அவர் நாமங்களாவன.

(11) பஞ்ச சைவம், சுலோஹம்

சுத்த சைவததா மார்க்க க்ஞானினும் வீரமேவச:
அபாரசரகரச்சைவ பஞ்சசைவ பிரகீர்த்தித: (85)
யோகினும் சயதீனும்ச க்ஞானீனும் மந்த்ர சாதக:
தியான பூஜநிமித்பாய சகலம் நிஷ்கலம் பவேத் (86)
பத்ரபுஷ்பபலம் தோயம் அன்னபானுத்ய மௌஷதம்
லிங்கார்ப்பிதலினுபுக்தேசத்திய:கோமாம்சபக்ஷணம் (87)
பதிலிங்க சதிச்சாஹா ஸ்வயம் பார்யேண முத்தமம்
பஞ்சேந்த்ரியசுகம் நாஸ்த்திபஞ்சசைவபிரகீர்த்தித: (88)
குருதேவோ மஹாதேவ மேகபாவேனி பாவயேத்
பாவத்வயஞ்ய பாவேன நரகே கால மக்ஷயம் (89)
குருதேவோ, மஹாதேவோ, குருதேவோ சதாசிவ:
குருதேவம் பரப்பிரஹ்மம் குருதேவம் பராத்பரம் (90)

சுத்த சைவம், வீர சைவம், மார்க்க சைவம், ஞான சைவம், கிரியா சைவம், எனப்பஞ்ச சைவத்திற்கு விபரம். (1) சுத்த சைவத்திற்கு சிரார்ச்சனம், புர மூலஸ்தான லிங்கம். (2) வீர சைவத்திற்து பஞ்சமுத்திரை பரிபூர்ணமான குருலிங்க ஜங்கமம். (3) மார்க்கசைவத்திற்கு யோகிகள், ஞானிகள், மந்திரவாதிகள், திகம்பரர், அவதூதர், மஹாத்மர் முதலான (21) ஆசனத்தவருக்கு, வீரசைவ மில்லை. யோகத்தினல் பச்சிமமென்னும், மேற்குமார்க்கத்த்வாராகி பிராண லிங்க சம்மந்திகளானர்கள். இவர்களுக்கு இஷ்டலிங்க மில்லை, பிராண லிங்காங்கிகள், இது மார்க்கசைவம். இன்னும், (4) ஞான சைவம் எப்படியென்றால் மூலஸ்தானத்து லிங்கத்திற்கு அன்னம், பானம், புஷ்பம், பழம். தாம்பூலம், வஸ்திரம், ஆபரணம், ஔஷதம் முதலானவைகள் சமர்ப்பிக்காமல் தான் கொள்ளக்கூடாதென்பதே ஞான சைவம் இன்னும்தன் தேஹத்திற்குவந்த சுகம், துக்கம், தட்டு, முட்டு, தாகு, சோகு, நிரோதம், இஷ்ட முதலான மனோவிஷயங்களையும், மூலஸ்தான லிங்கத்திற்கு சமர்ப்பிக்காமல் புரம்பாகக்கொண்டாலவன் கோமாம்சம் புசித்தபிறகு சுராபானம் செய்ததற்குச் சமானமாகும், இன்னும், (5) கிரியாசைவம் எப்படியென்றால், சரண சதி, லிங்க பதியான பிறகு சரணன் சதிசங்கமம் செய்தால் ரௌரவ நரகம். அதெப்படி என்றால் தான் லிங்கத்திற்குச் சதியான பிறகு சதிக்குச் சதிக்குச் சங்கமுண்டா, நிர்க்கங்கைக்குச் சங்கமுண்டா, இப்படிச்சரணனே சதியாகவும், லிங்கமே பதியாகியது. இது தான் கிரியா சைவம், ஆக இவைகள் பஞ்ச சைவநிர்ணயம், இப்படிப்பட்ட பஞ்சசைவங்கள் ஜங்கம ப்ரேமிகளுக்கே சம்மந்தப்பட்டது. இன்னும் குருதேவனென்னும், சப்தமும் இச்சங்கமர்களுக்கே சம்மந்தப்பட்டது. இன்னும், இப்பஞ்ச சைவம் யாருக்கென்றால் மஹந்து மல்லிகார்ஜுன சரலிங்கத்திற்கும், இன்னும் சர்வத்ரயமான வேத மூர்த்திக்கும் குரு லிங்க ஜங்கமமென்ற திரிகுணாத்மக லிங்கமானது

குறிப்பு:—வீர சைவம், சுத்த சைவம், மிசிர சைவம், சாமான்ய சைவம், இந்நான்கு சைவங்களின் விரிவான தத்துவங்களும், இன்னும் இந்நான்கு சைவர்களின் தீக்ஷாக்கிரமங்களும், இன்னும், வீரசாமானியர், வீர விசேஷர், வீரநிராபாரி களுடைய சவிஸ்தார தத்துவங்களடங்கிய துரையூர், ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய அத்துவித வெண்பா வென்னும், தமிழ் புஸ்தகம் உரையுடன் கிடைக்கும். அதி லநேக சங்கதிகள் விஸ்தாரமாகத் தெரிந்துக் கொள்ளவும். இன்னும், வீரசைவ வினாவிடை புஸ்தகத்திலும், சுருக்கமாகத் தெரிந்துக்கொள்ளவும்.

## (12)-வது (21) ஆசனத் தவர்கள் (16) தருசனத் தவர்கள்.

ஆதிருத்திரன் புருமத்தியஸ்தானத்தில் (21) ஆசனத்தவர்கள், (6) தர்சனத்தவர்கள் பிறந்தார்கள். (21) ஆசனத்தவர்களின் பெயர்களாவன. (1) பட்டப்பிரபாகரர், (2) பீமாம்சகர், (3) சார்வாகர், (4) அவதூதர், (5) திகம்பரர். (6) மஹாத்மர், (7) சாம்பவர், (8) தத்தர், (9) பிரேமநாதர், (10) ஆனந்தநாதர், )11) பைரவநாதர், (12) கபாலவுளிகர், (13) பஸிந்த்திராதித்யர், (14) கணபர், (15) சௌர்யர், (16) பாஷண்டியர், (17) பாசுபதியர், (18) பரமவேஷவதியர், (19) ருண்டாசார்யர், (20) சௌம்ய காசார்யர், (21) பௌம்ய காசார்யர், இன்னும்,

### சுலோஹம்.

